★ ★
Registered as a Newspaper in Ceylon
விலைசதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily
மலர் 8 (10-8-66) இதழ் 181

பராபவ ஆடி 25 ரபி: ஆகி 22 புதன்கிழமை

## வழிநெடுகிலும் பிரதமருக்கு ரயில் நிலையங்களில் வரவேற்பு

யாழ்ப்பாணம், புதன்

அனுராதபுரத்திலிருந்து விசேஷ ரயிலில் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா நேற்று யாழ்ப்பாணத்துக்குவரும் வழி நெடுகிலும் மக்கள் ரயில் நிலையங்களில் குழுமி நின்று கைகூப்பியும் கை அசைத்தும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

பிரதமர் பிரயாணம் செய்த விசேஷ ரயில் அனுராதபுரம் - யாழ்ப்பாணம் பாதையில் எந்த ரயில் நிலையத்திலும் நிறுத்தப்படாதபோதிலும் கிளிநொச்சி, பரந்தன், கொடிகாமம், சாவகச்சேரி போன்ற ரயில் நிலையங்களில், மெதுவாகச் சென்றுகொண்டிருந்தது. அப்பொழுது பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா கைகளை அசைத்து மகிழ்ச்சி தெரிவித்துக்கொண்டார்.


★ ஒரே இனம், ஒரே நாடு ★ சமதர்மமின்றேல் ஜனநாயகமில்லை ★ முதலாளித்துவ தொந்தியை கொழுக்கவைக்கமாட்டேன் ★ கைத்தொழில் ரீதியில் முன்னேற்றம்

# மகாவலிகங்கை இங்கு திரும்பும்

## ஜனசமுத்திர மத்தியில் பிரதமர் உறுதிமொழி

### "இரண்டு விதப் பிரஜைகளுக்கு இந்த நாட்டில் இடமில்லை"

—நமது நிருபர்கள் கா. யோகநாதன், ஈ. கே. ராஜகோபால்—



**யாழ்ப்பாணம், புதன்**

**நேற்று இரவு யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் வெள்ளம்போல் திரண்டிருந்த ஜன சமுத்திரத்தினிடையே பிரதமர் டட்லி சேனநாயக்கா பேசுகையில் 'மகாவலி கங்கையை' வடக்கே திருப்பும் திட்டம் இனிமேல் அமுலாகி விடும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.**

மகாவலி கங்கையை வடக்கே திருப்புவது குறித்து பரிசீலனை செய்த வெளிநாட்டு நிபுணர்கள் அதற்கு தடையெதுவுமில்லை என்று சொல்லி விட்டார்கள்; இதற்கு வெளிநாட்டு உதவியும் கிடைத்துவிடுவதாம் திட்டத்தை நாம் சுமுகமாகவே நிறைவேற்றி விடமுடியும் என்றும் பலத்த கரகோஷத்தினிடையே பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா கூறினார்.

தமிழ்க்காங்கிரஸின் 21-வது மகாநாட்டின் இறுதி நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு நேற்றிரவு உரை நிகழ்த்துகையில்தான் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா மேற்கண்ட கருத்துக்களை வெளியிட்டார்.

நாட்டின் ஒற்றுமையின் அவசியம் பற்றியும் தனது உள்ளக்கிடக்கை குறித்தும் பிரதமர் தெரிவிக்கையில்.

"இந்நாட்டில் வாழும் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் ஆகிய எல்லா இனத்தவரும் ஒற்றுமையாக ஒருவரையொருவர் நேசித்து அன்புடன் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொண்டு சிறந்த வாழ்க்கை நடத்தி இலங்கை எமது நாடு என்ற நிலை இவர்கள் எல்லோரிடமும் உருவாகிவிட்டால் நான் சந்தோஷமாகச் சாவேன் என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:

### இரண்டுதரப் பிரஜைகள் இல்லை

இந்நாட்டில் முதலாந்தரப் பிரஜையென்றும், இரண்டாந்தரப் பிரஜையென்றும் இருக்கக்கூடாது. எல்லாப் பிரஜைகளும் ஒரேமாதிரியாகக் கருதப்படவேண்டும். [illegible] இங்கு இடமில்லை எல்லோரும் ஒன்றே.

ஏழைமக்களின் நல்வாழ்வுக்காக நாம் அல்லும் பகலும் உழைக்கவேண்டும். என்னைப் பொறுத்தவரையில் சோஷலிஸம் இல்லாத ஜனநாயகம் ஜனநாயகம் அல்ல. ஜனநாயகம் என்றால் மக்கள் சுதந்திரமாக வாழவேண்டும்.

நாட்டில் முதலாளித்துவத்தை நான் கட்டிக் காப்பாற்றுவதற்காக நான் பிரதமராக வரவில்லை இந்நாட்டில் வாழும் மக்கள் முன்னேறவேண்டும் என்பதே எனது நோக்கம். முதலாளித்துவ தொந்தியை கொழுக்கவைக்கவேண்டுமென்பது எனது நோக்கமல்ல

மகாவலி கங்கை பற்றி எனக்கும் மந்திரி சில்வாவிற்கும் சில வேறுபாடு இருந்

( 8-ம் பக்கம் பார்க்க)



ரயிலிலிருந்து இறங்கிய பிரதமர் யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துடன் ரயில்நிலையத்துக்கு வெளியே வருகிறார்.

'இராமநாதன்

## இந்துபல்கலைக் கழகம் நிறுவித் தருக!

### பிரதமரிடம் ஜி ஜி வேண்டுகோள்

யாழ்ப்பாணம், புதன்

இராமநாத வள்ளல் விட்டுச்சென்ற சொத்துக்களையும், கட்டடங்களையும் காணிகளையும், மழுவராயர், ஆறுமுகநாவலர் ஆகியோரின் லட்சக்கணக்கான சொத்துக்களையும் சேர்த்து, கோடிக்கணக்கான பணம், வட மாகாணத்தில் இருக்கிறது. இவற்றின் மூலம் யாழ்ப்பாணத்தில், இராமநாதன் இந்துப் பல்கலைக் கழகத்தை கூடிய விரைவில் நிறுவுமாறு பிரதமரை, தமிழினம் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்ப்பெற்றோர் பல கஷ்

(8-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் நேற்றுமாலை நடைபெற்ற தமிழ்க்காங்கிரஸ் 21-வது மகாநாட்டிற்கு தலைமைதாங்கி, திரு. ஜி ஜி பொன்னம்பலம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது;

சென்றஅரசாங்கம் இதனை ஏற்று, வரவு-செலவுத்திட்டத்தில் அடையாள மான்யம் ஒதுக்கியுள்ளது ஆதலால் இதை தேசிய அரசாங்கம் நிறைவேற்றவேண்டும்



### தமிழன் வாழ்ந்தது உயர்ந்தது கல்வியால்

தமிழன் வாழ்ந்தது கல்வியால், உயர்ந்தது கல்வியால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

**வாலிபர்:**
இன்றிலிருந்து தொழிலற்ற வாலிபர்கட்கு நிரந்தர வேலை வாய்ப்புண்டு. 18-8-66 க்குமுன் நேரிலோ தொழிற்சந்தோர் மூலமோ வருக. டாக்டர் சி. அ. அம்பலவாணர், 51, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். 818

## விற்பனைக்கு

**லொறியின் பொடி:**
மூன்றரைத் தொன் ஒஸ்ரின் லொறியின் பொடி மட்டும் (Body) விற்பனைக்குண்டு. விபரத்துக்கு நேரே தொடர்புசெய்யவும். மிக்வைற் சோப் தொழிற்சாலை, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 836

**தட்டச்சு**
நல்லநிலையிலுள்ள தமிழ் தட்டச்சுயந்திரம் (Remington Standard) விற்பனைக்குண்டு. வர்த்தக கலாசாலை, 230, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம். 822

**காணி**
யாழ்ப்பாணம் அரசடிவீதியில் இந்துமகளிர் கல்லூரிக்கும் கந்தர்மடம் சந்திக்குமிடையில் இரண்டு மரப்புக் காணி விற்பனைக்கு இருக்கிறது. விபரங்களுக்கு: 330, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். 831

**காணி**
4 அறைவீடு, மின்சார வசதி, நீர்வசதி, கராச்சுடன் கலட்டி தெரு, வண்ணார்பண்ணையில் கல்லூரிகளுக்குக்கிட்ட வாடகைக்கு உண்டு. தொடர்புகொள்ளவும். 18/4, கலட்டி தெரு, வண்ணார்பண்ணை. 802

## கல்வி

**வகுப்புகள்**
ஜி. ஸி. ஈ. சாதாரணம் கலை / விஞ்ஞானம் / வர்த்தகம் முதலிய வகுப்புகளுக்கு இன்னும் சில வெற்றிடங்களே உள்ளன. விடுதி வசதியும் உண்டு. ஐக்கியகலாசாலை, நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 825

**பிரவேசங்கள்**
ஆங்கிலம் / தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து, கணக்குப் பதிவியல் வகுப்புகளுக்கு இப்பொழுது பிரவேசங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. பெண்களுக்குத் தனி விடுதி வசதி உண்டு. ஐக்கியகலாசாலை, நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 826

# கதிர்காம விபத்து சடலங்கள் வந்தன

பாணந்துறை, செவ்.
கதிர்காமம் செல்லும் வழியில் திஸ்ஸமகரமவில் ஒரு மரத்துடன் மோதிய லொறி விபத்தில் உயிரிழந்த பாணந்துறை ஐக்கிய சங்க ஊழி

(7-ம் பக்கம் பார்க்க)

# ஜெர்மனியின் பிரிவுக்கு வல்லரசுகளேகாரணம்

கொழும்பு, செவ்.
இதயத்தைப் பிளக்கும் ஜெர்மனியின் பிரிவு, கெடுபிடி யுத்தத்தின் மிக இழிந்த நிலையின் பிரதிபலிப்பேயாகும். இரண்டு ஜெர்மனிகளினதும் மறு பிணைப்பு இலட்சியம் ஜெர்மனியரின் சொந்த முயற்சிகளிலும் பார்க்க, வல்லரசுகளின் போட்டிக் கெடிபிடி குறைவதிலுலேயே, அடையக்கூடியதாகும்.

இலங்கையிலுள்ள அரசியல் வாதிகளுடன் ஜெர்மனியின் ஒற்றுமை, மற்றும் சர்வதேச விவகாரங்கள் பற்றி கலந்துரையாட இங்குவந்து சேர்ந்துள்ளார் டாக்டர் வில்லியம் ஸ்குவெட்ஸ் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஜெர்மனியின் ஒற்றுமையை இலட்சியமாகக் கொண்ட ஸ்தாபனமான 'பிரிக்க முடியாத ஜெர்மனியின் தலைவர் தான் டாக்டர் ஸ்குவெட்ஸ். அத்துடன் மேற்கு ஜெர்மனி அரசியல் விவகார மந்திரியின் அரசியல் ஆலோசகரும் அவரே.

# வெளிநாட்டு நிபுணர்களுக்கும் இடம் கொடுக்க வேண்டும்

## உயர் கல்வி தேசிய சபை குறித்து தமிழர் ஆசிரியர் சங்கம் யோசனை

யாழ்ப்பாணம், புதன்
கல்விமந்திரியால் கொண்டு வரப்பட்டிருக்கும் உயர்தரக் கல்வி மசோதாவை அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வரவேற்றிருக்கும் அதே வேளையில் சில யோசனைகளையும் தெரிவித்துள்ளது.

மேற்படி சங்கத்தின் வடபிரதேசக் கிளைகளின் பொச்சபைக்கூட்டம் தலைவர் திரு. ஐ. ஆ. இராமசாமி தலைமையில் நடைபெற்றது. பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. உயர்கல்விமசோதா குறித்து சபை தெரிவித்துள்ள யோசனைகளாவன:—

தேசிய உயர்தர கல்விச் சபையில் உள்நாட்டு வெளிநாட்டுக் கல்வி நிபுணர்கள் அங்கம் வகித்தல் வேண்டும். சகல இன மத மக்கட் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய தான—பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து பிரதமரால் தெரிவு செய்யப்பட்ட ஓர் விசேஷ கமிட்டியிடம் அக்கல்வி நிபுணர்களைத் தெரிவுசெய்யும் உரிமை விடப்படவேண்டும். தெரிவு செய்யப்பட்ட நிபுணர்களை நியமனஞ்செய்யும் உரிமை தேசாதிபதிக்கிருத்தல் வேண்டும். நிபுணர்கள் கூறும் ஆலோசனையை அமுல் நடத்தும் பொறுப்பு கல்வி மந்திரியிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

உயர்தரகல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் ஒவ்வோர் துறையிலும் நான்கு பாடங்களிலும் சித்தியெய்தியமாணவர்களைப் பல்கலைக் கழகத்தில் உயர்தரக் கல்வி பயிலச் சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும் என்ற தீர்மானம் உட்பட வேறு பல தீர்மானங்களும் நிறைவேறின.

# இளைஞர்கள் தீயநெறியில் இறங்காமல் தடுக்கும் வழி

## சமய அறிவைப் பெருக்கும்படி கல்லூரி அதிபர் யோசனை

தெல்லிப்பழை, செவ்.
''பதினாறு வயதிற்கும் இருபத்தைந்து வயதிற்கும் இடைப்பட்ட இளைஞர்களுக்குச், சமய அறிவு மிக அவசியம். இவ்வயதில் தான் மாணவர்கள் தீய நெறிகளிலே செல்லக்கூடும். இவ்வயதில் இவர்களுக்குச் சமய அறிவு இருக்குமேயானால் அது அவர்களை நன்னெறிப் படுத்தும்.'' இவ்வாறு வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் ச. அம்பிகைபாகன் தெல்லிப்பழை — பாலர் ஞானோதய சபையின் இருபதாவது ஆண்டுப் பரிசளிப்பு விழாக் காலை நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேற்படி விழா காசி விநாயகராலய மண்டபத்தில் நடைபெற்றது. காரியதரிசி தனுதிகாரி அறிக்கைபள் சமர்ப்பிக்கப்பட்டன. இளைப்பாறிய ஆசிரியர் செ. சின்னத்துரை, இளைப்பாறியவித்தியாதரிசி அ. சரவணமுத்து, ம. சி. சிதம்பரப்பிள்ளை ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

மாலை இசைநிகழ்ச்சிகள் வட்டாரவித்தியதரிசி திரு. வே. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றன.

# பாகிஸ்தானுக்கு எப்படி கிடைத்தன?

புதுடில்லி, ஆக. 9
1957-ம் ஆண்டு மேற்கு ஜேர்மனிக்கு கனடா வழங்கிய ஜெட் விமானங்கள் பாகிஸ்தானுக்கு எப்படிப்போய்க் கிடைத்தன என்று மேற்கு ஜேர்மனியை கனடா கேட்கிருக்கின்றது. இத்தகவல் நேற்று இந்திய பார்லிமெண்டில் வெளியிடப்பட்டது.

# குடத்தனை கரையூர் ரேட்டுவேலை 1965-66

மேற்படி வேலை செய்வதற்கு உள்ளூராட்சிப் பகுதியில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்த காரர்களிடமிருந்து குடத்தனைக் கிராமசபைத் தலைவரால் 20-8-66ம் திகதி காலை 10மணிவரையும்கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் பெறவிரும்புவோர் 18-8-66 ந்திகதி காலை 8-30 மணி தொடக்கம் மு.ப.12 மணி வரையும் எமது கி. ச. கந்தோரில் கேள்விப் பிணைப் பணம் ரூபா.25/-ம் கேள்விப் பிணைப் பத்திரப் பணம் ரூபா 5/-ம் செலுத்தி, அதற்குரியமாதிரிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும். கேள்விப்பிணைப்பத்திரப் பணம் ரூ 5/-ம் திருப்பிக்கொடுக்கப் படமாட்டாது. வேலை விபரங்களை எமது கி ச. கந்தோரிலும், யாழ்ப்பாணம் உதவி ஸ்தலஸ்தாபன கந்தோரிலும் அறிந்துகொள்ளலாம்.

நீ. யோ. மரியாம்பிள்ளை,
கி ச தலைவர், குடத்தனை.
கி ச. கந்தோர், குடத்தனை
6-8-66 835


**REGAL—JAFFNA**
NOW SHOWING
Cliff Robrtson
in
**633 SQUADRON**
(War Film) (Cinemascope-Color)

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 3-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
**LONGEST DAY**

**மகாத்மா தியேட்டர்**
(கரவெட்டி)
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
முதலியோர் நடித்த
**"பூமாலை"**

**நியூ காலிங்கன**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி
நடித்த
**பணத்தோட்டம்**

★ கோவில் அபிஷேகம், திருவிழாக்கள்
★ திருமண வைபவங்கள்
★ புதுமனைப் பிரவேசம்
★ புதுமனைக்கு அத்திவாரமிடல்

ஆகிய வைபவங்களுக்குத் தேவைப்படும் அபிஷேகத் திரவியங்கள், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை, புனுகு, ஜவ்வாது, விளைவ சூடம், சாம்பிராணி, ஊதுபத்தி, வாசனைதிகள், பன்னீர், நெய், தேன், அத்தர், நவரத்தினம், பஞ்சலோகம், அஷ்டபந்தன மருந்து முதலிய சகல சாமான்களும் மற்றும் சந்தனம், குங்குமம், சாந்துப்பொட்டுகள் ஆகியவைகளும் சகலவிதமான மருந்துகளும், மருந்துச் சரக்குகளும் தங்கள் திருப்திக்கேற்ற வகையில் மலிவாக எம்மிடம் கிடைக்கும்.

★ மயில் மார்க் சந்தன வில்லைகள்
★ சுகந்த சந்தனப் பவுடர்
★ பச்சை சந்தனம்
(உடன் யந்திரத்தினால் அரைத்தது)
எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம்

**எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி**
மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.

53, காங்கேசன்துறை வீதி, பெரியகடை யாழ்ப்பாணம். போன்: 541, 7068
"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.





## கொழும்பு
புதன் 10 - 8 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீற்றர் & 61 மீற்றர்**
காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீட்டர் & 41 மீட்டர்**
பகல் 12-15 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**
மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 படத்திவிருந்து

இரவு 6-15 கிராம சஞ்சிகை, 6-45 நிலையஒலிப்பதிவுகள், 7-45 பேச்சு 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 புல்லாங்குழலும் & [illegible] மர், 10-00 நேயர்விருப்பம்.


11-ந் திகதி வியாழன் முதல்
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
மற்றும் சினிமாஸ் திரைகளில்
சிவாஜி, எஸ். எஸ். ஆர்,
எம். ஆர். ராதா, பாலையா, முத்துராமன்,
நாகேஷ், தேவிகா, புஷ்பலதா
நடித்த
பாரதமாதா பிக்ஸர்ஸ்
**பழநி**

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
என். டி. ராமராவ்-அஞ்சலிதேவி நடித்த
**லவகுச**


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆசிய மகாநாடு யோசனை: வட வியட்னுமும் நிராகரித்தது

## தாய்லாந்து சமாதான முயற்சி தோல்வி?

சைகோன், ஆகஸ்ட் 9

**வியட்னுமில் அமைதியும் சமாதானமும் நிலவுவதற்கான வழிகளை உருவாக்குவது பற்றி ஆலோசிப்பதற்காக ஆசிய நாடுகளின் மகாநாடொன்றைக் கூட்ட வேண்டும் என்று தாய்லாந்து தெரிவித்திருந்த ஆலோசனையை வடவியட்னும் முற்றாக நிராகரித்துவிட்டது.**

வியட்னும் தகராறுக்கு சமாதானத் தீர்வு ஒன்றைக் காணும் பொருட்டு ஆசியநாடுகளின் மகாநாடொன்றைக் கூட்ட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்ட இந்தயோசனையை ஏற்கெனவே சீனு நிராகரித்திருக்கிறது.

தாய்லாந்து தெரிவித்துள்ள யோசனையின்படி வியட்னுமில் அமைதியை உருவாக்கும் வழிவகைகள் பற்றி முதலில் ஆசிய நாடுகளின் மகாநாடொன்றை நடத்துவது, அந்தமகாநாட்டில் உருவாகும் யோசனைகளின் அடிப்படையில் தகராறில் சம்பந்தப்பட்டவர்களைக் கொண்ட மகாநாடொன்றுக்கு இறுதியாக ஏற்பாடு செய்வதுமாகும்.

### பௌத்தர்கள் பகிஷ்கரிப்பு

தென்வியட்னும் அரசாங்கம் ஏற்பாடு செய்யவிருக்கும் புதிய பொதுத்தேர்தலை பகிஷ்கரிப்பதுஎன்று ஐக்கிய தேசிய பௌத்தர்கள் சங்கம் நாட்டிலுள்ள எல்லா பௌத்தர்களையும் கேட்டுக்கொண்டிருக்கிறது.

தென்வியட்னுமில் தற்போது பதவியில் இருந்து வரும் அரசாங்கத்தை அங்குள்ள பௌத்தர்கள்தொடர்ந்து எதிர்த்து வருவதும் தீவிரமாக எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதும் குறிப்பிடத்தக்கது.

### இளைஞர்களுக்கு இந்திராவின் யோசனை

புதுடில்லி, ஆக. 9

சுதந்திர உரிமைகளைப் பயன்படுத்தி முன்னேறுவதற்கு இளைஞர்கள் முன்வர வேண்டும் என்று பிரதமர் இந்திரா காந்தி ஒரு செய்தியில் கூறியிருக்கிறார். தேசிய இளைஞர்கள் தினத்தையொட்டி பிரதமர் இந்த செய்தியை வெளியிட்டார். வெள்ளையனே வெளியேறு என்ற இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதையொட்டி இந்த இளைஞர் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இளைஞர்கள் தம் நடவடிக்கைகள் எல்லாவற்றிலும் நாட்டின் நலனைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்று பிரதமர் இந்திரா குறிப்பிட்டிருக்கின்றார்.

### இந்தவாரத்துடன் முற்றுப்புள்ளி

ஜாகர்த்தா, ஆக. 9

இந்தோனேஷியாவுக்கும் மலேசியாவுக்கு மிடையில் கடந்த மூன்று ஆண்டுகளாக இருந்துவரும் தகராறுகள் அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கு முன்பதாக முடிவடைந்துவிடும் என்று இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி ஆதம்மாலிக் தெரிவித்திருக்கிறார்.

இது சம்பந்தமாக ஒரு மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக மலேஷிய உதவி முதன் மந்திரி அப்துல்ரஸாக் விரைவில் இந்தோனேஷியா வருவாரென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

லண்டன், ஆக. 9

ரொடீஷிய நிலைமைகள் குறித்து தீர்வு ஒன்றை ஏற்படுத்தும் நோக்கத்துடன் ரொடீஷியபிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காக பிரிட்டிஷ் அதிகாரிகள் சிலர் விரைவில் ரொடீஷியா செல்லவிருக்கிறார்கள் என்று பிரதம மந்திரி திரு. வில்சன் காமன்ஸ் சபையில் அறிவித்திருக்கிறார்.

# கி. வா. ஜ. வுக்கு ரங்கூனில் விழா

இரங்கூன், ஆக. 5

கலைமகள் ஆசிரியரும் தமிழ் அறிஞருமான திரு. கி. வா. ஜகந்நாதனின் அறுபதாம் ஆண்டு மணிவிழா ரங்கூனில் ஸ்ரீசித்திவிநாயகர் கோவில் மண்டபத்தில் கொண்டாடப் பெற்றது. ஸ்ரீசித்திவிநாயகப் பெருமானுக்கு ஆரம்பத்தில் கி. வா. ஜ. வின் நலன் கருதி வழிபாடு செய்யப்பெற்றது.

சங்கங்களின் தலைவர்கள் பல்வேறு ஸ்தாபனங்களின், பிரதிநிதிகள், தமிழ் எழுத்தாளர்கள், தமிழ் ஆசிரியர்களுமாக விழா மண்டபம் நிறைய மக்கள் குழுமியிருந்தனர். மணிவிழாச் செயலாளர் திரு மு. அண்ணாமலை அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தலைமை வகித்த தாகூர் கல்லூரி விரிவுரையாளரும், தமிழ் புலவருமான திரு. இராம. சுலுங்கப்பனார் தமது உரையில், கி. வா. ஜ. பர்மாவுக்கு ஆறரை ஆண்டுகட்கு முன்பு தனவைசிய இளைஞர் சங்கத்தாரின் அழைப்பை ஏற்று வந்திருந்தபோது தைப்பூச விழாவிலும், பொங்கல் திருநாளிலும் கலந்துகொண்டு அவர்உரையாற்றியசிறப்பையும், தமிழ் இலக்கியத்துறையில் அவர் ஆற்றிவரும் தொண்டினையும் வெகுவாகப் பாராட்டிப் பேசினார்.

திரு. ஆ. முத்துக்குமரன் பேசுகையில், டாக்டர் உ. வே. சாமிநாதஐயரின் ஆராய்ச்சி, உள்ளக் கருத்து, உணர்வு, ஆற்றல் எல்லாம் அவரது மாணாக்கராகிய கி. வா. ஜ. விடம் புகுத்தி தம்மிலும் சிறந்த தமிழ் மகனாக ஆக்கித்தந்துள்ளார். இவரது மணிவிழா தமிழ்மொழி விழாவாகும். இவர் தந்துள்ள நூல்கள் யாவும் சிறந்தவை என்றும் அவற்றைத் தமிழ் மக்கள் யாவரும் படித்துப் பயனடைய வேண்டுமெனக் கோரினார்.

கவிஞர் பிரான்மலை காந்திதாசன் கவிபாடி சபையோரைமகிழ்வித்தார். திரு அஜந்தா மாணிக்கம், திரு. கிருஷ்ணசாமி பத்தர், சமரச சுத்த சன்மார்க்க சபைத்தலைவர் திரு. கணபதி, திரு இராமதிருநாவுக்கரசு, ஸ்ரீசித்திவிநாயகர் கோயில் நிர்வாக பொறுப்பாளர் திரு சத்தியானந்தம் திரு ச. தண்டபாணி முதலியவர்கள் பேசினர்கள்.

திரு காந்தி அண்ணாமலை பேசுகையில் தமிழ் நாட்டிலுள்ள தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவராகத் திகழ்கின்றவர் கி. வா. ஜ எழுத்துலகில் தமக்கென்று ஒரு தனிஇடத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார் என்றார்.

விழாச்செயலாளர் திரு. மு. அண்ணாமலை நன்றி கூறினார்.

## தமிழ் நாட்டுச் செய்திகள்

### ஜெய்ப்பிரகாஷ்

கோடைக்கானலில் காவலில் வைக்கப்பட்டுள்ள சேக் அப்துல்லாவை ஜெயப்பிரகாஷ் நாராயண் மூன்று முறை சந்தித்து கலந்துரையாடினார். இந்தப்பேச்சுகள் மிகவும் முக்கியம் வாய்ந்தவை என்று கருதப்படுகின்றது.

ஃ ஃ ஃ

### காவிரியில்எண்ணெய்

காவிரி ஆற்றுப்படுகையில் எண்ணெய் ஆராய்ச்சிவேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன இந்த வேலைகள் இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஆரபிக்கப்பட்டன.

ஃ ஃ ஃ

### ஹோட்டல்முன் ஆர்ப்பாட்டம்

இட்லி, தோசை மற்றும் உணவுப்பொருள் விலைகளைக் குறைக்குமாறு கோரி மவுண்ட் ரோடில் ஹோட்டல் முன்னிலையில் வாடிக்கைகாரர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். மற்ற ஹோட்டல்களுக்கெல்லாம் முன்மாதிரியாக இருக்கும்படி அவர்கள் அந்த ஹோட்டல் முதலாளியைக் கேட்டுக்கொண்டனர்.

ஃ ஃ ஃ

### சேலம் உருக்காலை

சேலம் உருக்காலைத் திட்டத்துக்கு கடனுதவி அளிக்கும்படி ஜப்பானிய அரசாங்கத்துக்கு சிபார்சு செய்வதாக ஜப்பானிய ஆலோசகர்கள் அறிவித்துள்ளனர்.

ஃ ஃ ஃ

### மேல்சபையில் திருவள்ளுவர்

சென்னை மேல்சபை மண்டபத்தில் திருவள்ளுவர் உருவப்படத்தை தற்காலிக கவர்னர்உஜ்ஜல்சிங் திறந்து வைத்தார். அவர்அப்போது பேசுகையில் மனித சமுதாயத்தின் நன்மைக்காகவும் உயர்வுக்காகவும் திருவள்ளுவர் கூறியுள்ள அறிவுரைகளை சபை மெம்பர்களுக்கும், பார்வையாளர்களுக்கும்இப்படம் எப்போதும் நினைவுறுத்திக் கொண்டிருக்கும் என்று கூறினார்.

### உணவுத் தட்டுப்பாடு முதல்வர் மறுப்பு

தஞ்சை ஜில்லாவில் நிகிர கொள்முதல் காரணமாக உணவுத்தட்டுப்பாடுஏற்பட்டிருப்பதாக கூறப்படுவதையும் நீலகிரி பகுதியில் போதிய உணவு வகை இல்லையென்று கூறப்படுவதையும் முதன் மந்திரிதிரு. பக்தவத்சலம் மறுத்திருக்கிறார்.

### பிரபுக்கள் சபை தீர்ப்பு

பேர்லின், ஆகஸ்ட் 9

இங்கிலாந்திலுள்ள பிரபுக்கள் சபை மேற்கு ஜேர்மன் நிலையத்தினருக்கு எதிராக ஜீனுவிலுள்ள வெப்கார்ள்ஸ் சீஸிஸ் நிலையத்தினர் தொடர்ந்த வழக்கு நியாயமானது எனத் தீர்ப்பு வழங்கியுள்ளது.

முன்னர் 1964-ம் ஆண்டு லண்டன் உயர் நீதிமன்றம் ''ஜேர்மன் ஜனநாயகக் குடியரவுக்கும், இங்கிலாந்துக்கும்எதிராக ஏதும்இராஜியத் தொடர்பில்லாததால் ஜீனுவில் உள்ள வெப்கார்ல் சீஸிஸ் நிலையத்துக்கு இங்கிலாந்தில் ஏதும் உரிமை கிடையாது'' என்று மேற்கு ஜேர்மன் நிலையத்தினர் தொடர்ந்த வழக்கின்போது வழங்கிய தீர்ப்பினை பிரபுக்கள்சபைநிராகரித்திருந்தது.

மேற்கு ஜேர்மன் நிலையத்தினரும், அவர்களுடையஇங்கிலாந்துப் பிரதிநிதிகளும், உள்ளவெப்கார்ல்சீஸிஸ்ஜீனுவில்நிலையத்தினருக்குவழக்குக்கான செலவினங்களைக் கொடுக்கவேண்டும் எனவும் பிரபுக்கள்சபைதீர்ப்பு வழங்கியது.

மேற்கு ஜேர்மன் நிலையத்தினர் முன்பு பின்லாந்து, சுவிற்ஸர்லாந்து ஆகிய நாடுகளில் ஜீனுவிலுள்ள வெப்கார்ள் சீஸிஸ் நிலையத்தினருக்கு எதிராக தொடர்ந்த வழக்குகளை ஆதாரமற்றவைஎன்று அந்த நாடுகளின் நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்கியிருந்தமை...

# நைஜீரியாவில் மீண்டும் சமஷ்டி ஆட்சி

## கேர்ணல் கோவான் அறிவிப்பு

டெக்காஸ், ஆக. 9

நைஜீரியாவில் மீண்டும் பிராந்திய சமஷ்டி ஆட்சி முறையைக் கொண்டுவருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாக நைஜீரியாவின் புதிய ஆட்சித் தலைவர் கேர்ணல் கோவான் அறிவித்திருக்கிறார்.

கேர்ணல் கோவானின் இந்த முடிவு குறித்து ஆலோசிப்பதற்கான ஒரு மகாநாட்டை அவர் விரைவில் கூட்டுவதற்கு இருக்கின்றார். கேர்ணல் கோவான் விடுத்த ஒரு அறிக்கையில் பழைய அரசாங்கம் ஒற்றை ஆட்சி முறையை ஏற்படுத்தியதன் காரணமாகவே நாட்டில் கலவரங்களும் புரட்சியும் ஏற்பட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார்

சமஷ்டி ஆட்சிமுறை உருவானதும் தமது அசாங்கம் விலகிக்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

### பாகிஸ்தானுக்கு அமெரிக்க ராணுவ ஆயுதங்கள்

புதுடில்லி, ஆக. 9

பாகிஸ்தானுக்கு அமெரிக்க ராணுவ ஆயுதங்கள் விநியோகிக்கப்படுவது இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்தாக முடியும் என்று இந்திய அரசாங்கம் ஐ நா. வுக்கு அறிவித்திருக்கின்றது.

இந்தத் தகவலை இந்திய பாதுகாப்பு அமைச்சர் சர்தார் சுவர்ண்சிங் பார்லிமெண்டில் அறிவித்திருக்கின்றார்.

அமெரிக்கா பாகிஸ்தானுக்கு விநியோகிக்கும் ஆயுதங்கள் சீனுவுக்கோ வேறு நாடுகளுக்கோ எதிராகப் பாவிக்கப்பட மாட்டாது. அவை இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்தை விளைவிப்பதாகவே இருக்கும் என்று சர்தார் சுவரண்சிங் கூறினார்.

அமெரிக்கா விநியோகிக்கும் ஆயுதங்கள்ஒருபோதும் இந்தியாவுக்கு எதிராகப் பாவிக்கப்பட மாட்டாது என்றே அமெரிக்கா உறுதியளித்து வந்திருப்பதாகவும் அவர் சபையில் தெரிவித்தார்.

### கட்டுப்பாட்டு விலை மீறியவருக்கு அபராதம்

வல்வெட்டித்துறை, செவ்.

நெல்லியடியைச் சேர்ந்த கந்தையா என்பவர் புளியைக் கட்டுப்பாட்டுவிலைக்கு மீறி கூட்டி விற்றதற்காக பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. ஜெரோம் சில்வா 150 ரூபா அபராதம் விதித்துள்ளார்.

டில்லிக்கு பாக் ஆட்சேபக்குறிப்பு

# 'நீதிபதி ஸபருல்லாவுக்கெதிரான இந்திய பிரசாரம்'

## ஆபிரிக்கரின் உணர்ச்சியை தூண்டிவிடாதீர்!

ராவல்பிண்டி, ஆகஸ்ட் 8

பாகிஸ்தானுக்கு எதிராக ஆபிரிக்கநாடுகளின் உணர்ச்சியை இந்தியா கிளப்பிவிடுகிறதென்ற குற்றச்சாட்டுடன், புதுடில்லிக்கு ஆட்சேபக்குறிப்பு ஒன்றை பாகிஸ்தான் அனுப்பியுள்ளது

தென்மேற்கு ஆபிரிக்கா விஷயமாக உலக நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கில், பாகிஸ்தானின் திறமைவாய்ந்த நீதிபதி ஸபருல்லாகான் வேண்டுமென்றே அமரவில்லையென இந்தியா நிபந்தனைசெய்வது ஆபிரிக்கர்களின் உணர்ச்சியைக் கிளற வழிசெய்திருப்பதாய் ஆட்சேபக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

ஸபருல்லா அளித்த வாக்குறுதியை மீறியதாக இந்தியா பிரசாரம் செய்துவருவதை இக்குறிப்பு கண்டிக்கிறது.

திரு. ஸபருல்லா ஒரு தடவை ஆபிரிக்க நாடுகளால் உலக நீதிமன்றத்துக்கு நியமிக்கப்பட்ட நீதிபதியாதலால், இந்த வழக்கில் அமரக்கூடாதென உலக நீதிமன்றத்த தலைவர் கேட்டுக்கொண்டதாயும், ஸபருல்லா இந்தக் கோரிக்கையை விரும்பாதபோதிலும், பெரும்பான்மை நீதிபதிகள் அதை ஆதரித்ததால், உலக நீதிமன்றத் தலைவரின் கோரிக்கைக்கு இணங்குவதைத்தவிர வேறு வழிஅவருக்கு ஏற்படவில்லை என்றும் குறிப்பு கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

உண்மை ஜனநாயகத்தில் மிகமிகப் பலவீனனுக்கும் மிக பலசாலிக்கான சமசந்தர்ப்பம் கிடைப்பதாகஇருக்கவேண்டும். அஹிம்சைமூலமே இதை நாம் பெறமுடியும். சுயாட்சியின்வெற்றி, நம் உள்ளத்தின் பலத்தையும் எந்தச் சோதனையையும் நாம் எதிர்த்துப் போராடும் திறனையுமே பொறுத்துள்ளது. —மகாத்மா காந்தி


# ஈழநாடு

EELANADU National Tamil Daily Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna Telephone : 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு ஆடி 25 (10 8 66)


## பிரதமரின் வெற்றி

தேசிய அரசாங்கத்தை அமைத்து தேசிய ஐக்கியத்தை சொல்லிலும் செயலிலும் உருவாக்கிய பிரதமர் திரு. டட்லிசேனநாயகா நேற்று யாழ்ப்பாணத்துக்கு வந்து சிலமணி நேரமே தங்கியிருந்த போதிலும் அவரது விஜயம் யாழ்ப்பாணத்தின் சரித்திரத்தில் மட்டுமல்ல இலங்கையின் சரித்திரத்திலுமே முக்கியத்துவம் பெற்றுவிட்டது. யாழ்ப்பாணம் ரயில்நிலையத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் அளித்த உற்சாகமான வரவேற்பில் பிரதமர் பேசுகையில் கூறிய கருத்துக்கள் இலங்கை வாழ் மக்கள் அனைவரும் ஆழ்ந்து சிந்தித்துப் பின்பற்ற வேண்டியவையாகும்.

இந்தியா போன்ற அண்டை நாடுகள் இரத்தம், உயிர்த்தியாகம் பல செய்து சுதந்திரம் பெற்ற போது இரத்தம் சிந்தாமலும், உயிர்ப்பலி கொடுக்காமலும் கஷ்டமெதுவுமின்றி இலங்கை சுதந்திரம் பெறறதென்றும் இதற்கு அன்று நிலவிய சமூக, சமய ஒற்றுமையே காரணமென்றும் பிரதமர் கூறினர். கஷ்டமின்றிப்பெற்ற சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டுமென்றும் சமூக ஐக்கியமும் நட்புறவும் இல்லையானுல் பொருளாதார விடுதலை அடைய முடியாதென்றும் நாடு முன்னேற முடியாதென்றும்பிரதமர் சரியாகச் சுட்டிக்காட்டினர்.

தேசிய ஐக்கியத்தின் அவசியம்பற்றி இதற்கு முன் ஆட்சியிலிருந்த பிரதமர்களும் இதர அமைச்சர்களும பல தடவைகளிலும பல இடங்களிலும் பேசியிருக்கின்றனர் சென்ற ஒன்பது ஆண்டு காலம் ஆட்சியிலிருந்த அரசாங்க அமைச்சர்களும் தேசிய ஐக்கியத்தைப்பற்றிப் பேசியிருக்கின்றனர். நாட்டின் ஒரு பகுதியில் ஒரு விதஐக்கியம் பற்றியும் நாட்டின் மற்றொரு பகுதியில் வேறுவித ஐக்கியம்பற்றியும் சிலர் பேசியிருக்கின்றனர். ஒரே மொழி. ஒரே நாடு என்ற முறையைப் பின்பற்றுவதன் மூலம் தான் தேசியஐக்கியத்தை உருவாக்க முடியுமென்று கூறியவர்களும், கூறிக்கொண்டு இருப்பவர்களும் உள்ளனர் பிரதமர் திரு டட்லி சேனநாயகா, யாழ்ப்பாணத்துக்குவந்து மக்கள் அவருக்கு அளித்த அமோக வரவேற்பைக் கண்டு மயங்கி, தேசிய ஐக்கியம்பற்றிப் பேசவில்லை; நிறைவேருத வாக்குறுதிகளையும் அளிக்கவில்லை.

சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் காலியில் நேற்று முன் தினம் பிரதமர் பேசுகையில், தேசிய ஐக்கியத்தின் அவசியத்தையும் பொருளாதார சுதந்திரம் பற்றியும் சமூக நல்லுறவு பற்றியும் பேசினர். சிலதினங்களுக்குமுன் கண்டியிலும். அதற்குமுன் கிழக்குமாகாணத்தில் கல்முனையிலும், அம்பாறையிலும் இதையே வலியுறுத்தினர். நேற்று யாழ்ப்பாணத்திலும் ஐக்கியத்தின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

தேசிய ஐக்கியம் தமிழருக்கு மட்டுமல்ல இந்நாட்டில் வாழும் சகல சமூக, இன, மத மக்களுக்கும் அவசியம், நாட்டின் முன்னேற்றத்துக்கு, பொருளாதார விடுதலைக்கு அத்தியாவசியம்

யாழ்ப்பாண மக்கள் உழைப்பு மிகுந்தவர்கள். யாழ்ப்பாண விவசாயிகளின் உழைப்புத்திறன் பற்றி பிரதமரும் நேற்றுக் குறிப்பிட்டிருந்தார். யாழ்ப்பாண மக்கள்மட்டுமல்ல இலங்கை மக்கள் அனைவருமே மனம் வைத்து ஒன்றுசேர்ந்து முயற்சிசெய்தால் அவர்களின் உழைப்புத்திறன் மூலம்பிரதமர்ஆவலோடு எதிர்பார்க்கும் பொருளாதார சுதந்திரம் விரைவில் கிடைத்துவிடும்.

தேசிய ஐக்கியத்தை உருவாக்கி பொருளாதாரத்திலும் நாடு சுதந்திரம் பெறுவதற்கு ஒத்துழைப்பு அளிக்குமாறு பிரதமர் வேண்டுகோள் விடுத்திருக்கிருர்; நேசக்கரம் நீட்டியிருக்கிருர். தமிழ்பேசும்மக்கள் மட்டுமல்ல இந்நாட்டின் மக்கள் அனைவரும் நாட்டின் நலன் கருதி பிரதமருக்கு பூரண ஒத்துழைப்பையும் ஆதரவையும் அளிப்பார்களென்பது நிச்சயம். பிரதமர் தமது யாழ்ப்பாண விஜயத்தில் இதைஉணர்ந்திருப்பார். இந்த வகையில் பிரதமரின் யாழ்ப்பாண விஜயம் வெற்றி பெற்றுவிட்டது.

# யாழ். நகரில் தேசீய அரசாங்கம்!

யாழ்ப்பாணம், புதன்

பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவைத் தலைவராகக்கொண்ட தேசிய அரசாங்கம்இப்பொழுது யாழ்ப்பாண நகரில்தனது நிர்வாக அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருப்பது போன்ற பிரமையைஏற்படுத்த கூடிய வகையில் பிரதமரும் முக்கிய அமைச்சர்களும் இங்கு இன்று விஜயம் செய்து பவனிவரும் காட்சிகள் அளித்துக்கொண்டிருக்கின்றன.

யாழ்ப்பாணத்தின் சரித்திரத்திலேயே சுதந்திர இலங்கையின் பிரதமரும் முக்கிய அமைச்சர்களும் ஒரே சமயத்தில் யாழ்ப்பாணத்துக்கு வருகைதத்திருப்பது இன்றுதான்.

இன்று காலை பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கிய அமைச்சர்களும் உதவி அமைச்சர்களும் அங்கிருந்து 'பாம் கோட்' விடுதிக்கு அழைத்துச்செல்லப் பட்டனர். விடுதியில் சிரமபரிகாரம் செய்துகொண்ட பின்னர் ரயில் நிலையத்தில் வந்திறங்கிய பிரதமருடன் சேர்ந்துகொள்ளச்சென்றனர்.

### முற்றவெளியில் விழாக்கோலம்

தமிழ்க்காங்கிரஸின் இருபத்தியோராவது ஆண்டு மகாநாட்டின் இறுதிநிகழ்ச்சியாக இன்று மாலை யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்துக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்துவிட்டன சிகரங்களும் காங்கிரஸ் நால்வர்ணக் கொடிகளும் கோட்டை மைதானத்தை திருவிழா மைதானம் போல் காட்சியளிக்கச்செய்துள்ளது.

# அலங்கார இரதத்தில் பவனி

## பிரதமரும் ஜி ஜி.யும் மணமக்கள் போல் சென்ற ஆனந்தக் காட்சி

யாழ்ப்பாணம், செவ்.

புகையிரத நிலையத்திலிருந்து அலங்கரிக்கப்பட்ட திறந்தமோட்டார்ரதத்தில் பிரதமரும் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி ஜி பொன்னம்பலமும்பாமகோட்டுக்கு பவனியாகச் சென்றனர். இதனையடுத்துச்சென்ற திறந்த அலங்கரிக்கப்பட்ட கார்களில் காணி நீர்ப்பாசனமந்திரி திரு சி. பி. டி. சில்வா, நிதிமந்திரி திரு. விஜயமானேயும் சென்றனர். அடுத்த காரில் போக்குவரத்து மந்திரி திரு. குருன்ளே, உதவி தபால்மந்திரி திரு. ஜயபால மெண்டிஸ் சென்றனர்.

பிரதமர் பவனியாகச் சென்றபோது வீதியின் இருமருங்கிலும் பெரியவர்களும், சிறியவர்களும், பெண்களும். பள்ளி மாணவர்களும். சாரணர்களும், வெண்ணிற ஆடை தரித்த பெண் சாரணிகளும் நின்று பிரதமருக்கு மரியாதை செலுத்தி மகிழ்ச்சி தெரிவித்தார், அவர்கள் காட்டிய மகிழ்ச்சிக்கு பிரதமர் நன்றி சொல்வதுபோல கைகூப்பி வணங்கி புன்முறுவல்செய்து கொண்டார்.

வீதியின் இருபக்கங்களும் மகர தோரணங்களால் சோடிக்கப்பட்டிருந்தன. தேசியக்கொடியும், தமிழ்க் காங்கிரஸ் கொடியும் அங்குமிங்குமாகக் காற்றில் அசைந்தாடிக்கொண்டிருந்தன.

சந்திக்குச் சந்தி பிரதமரைப் பூரணகும்பம் வைத்து திலகமிட்டு வரவேற்றனர்.

# நல்லூர் நுழைவாயிலில் பிரதமருக்கு வரவேற்பு

நல்லூர், செவ்.

யாழ்ப்பாணச் சரித்திரத்தில் பண்டைக்காலம்முதல் இன்றுவரை முக்கியத்துவம் பெற்றுள்ள நல்லூரின் நுழை வாயிலெனக் கருதப்படும் கைலாயபிள்ளையார் கோயில் சந்தியில் பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவுக்கு உற்சாகமான வரவேற்பளிக்கப்பட்டது.

மாவிலையும் தோரணங்களும் செவ்விளநீர்க் குலைகளும் தமிழரசுக் கட்சியின் மூவர்ணக் கொடிகளும் காங்கிரஸ் நால்வர்ணக் கொடிகளுமாக கைலாயபிள்ளையார்கோயில் சந்தி கலியாண விழாபோல் காட்சியளித்துக் கொண்டிருந்தது.

இன்று அதிகாலை தொடக்கம் இவ்விடத்தில் நல்லூர்த் தொகுதியைச் சேர்ந்தவர்களும் மற்றும் பொதுமக்களும் திரண்டு நின்று பிரதமரை வரவேற்க ஆவலோடு காத்து நின்றனர். நல்லூர்த் தொகுதி எம பி. டாக்டர் இ. மு. வி. நாகநாதனும் காலையிலிருந்தே பிரதமரை வரவேற்பதற்கான ஏற்பாடுகளை மேற்பார்வை செய்து கொண்டு நின்றார்

சரித்திரப்பிரசித்தி வாய்ந்த நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்கு பிரதமரும்மற்றையோரும் ஊர்வலமாகச் சென்றபொழுது கைலாசபிள்ளையார்கோயில் சந்தியில் நல்லூர்த்தொகுதி எம் பி. டாக்டர் ஈ.எம்.வி.நாகநாதன் பிரதமருக்கு மலர் மாலை சூட்டி வரவேற்ருர். அங்கு திரண்டிருந்த மக்கள்

(8-ம் பக்கம் பார்க்க)

## மூவர் மூர்ச்சை

யாழ்ப்பாணம், செவ்.

ரயில்நிலையத்தில் பிரதமரை வரவேற்கத்திரண்டிருந்த ஜனத்திரளில்வெப்பம் தாங்காது மயக்கமடைந்த மூவரை பொலிசாரும் சாரணரும் முதல் உதவியளித்து மூர்ச்சை தெளிவித்தனர்.

# ஐயாறன் எழுதுகிறது

அன்புடையீர்,

கௌரவ பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்கா அவர்களின் யாழ்ப்பாண விஜயத்தின்பொழுது அன்னருக்கு அளிக்கப்படும் உத்தியோகபூர்வமான வரவேற்புக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு, 1966ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9ந் தேதி செவ்வாய்க்கிழமை மு. ப. 10-30 மணிக்கு யாழ்ப்பாணம் புகையிரத நிலயத்தில் சமுகமளிக்குமாறு யாழ்ப்பாணமாவட்ட அரசாங்க அதிபர் அவர்கள் தங்களை அன்புடன் அழைக்கின்ருர்கள். (தயவுகூர்ந்து இந்த அழைப்பிதழைக் கொண்டுவரவும்) என்று எக்ஸ்பிரஸ்தபாலில் கிடைத்தது.

நான்கு நாட்களாக உடல் நலம் சரியில்லை. கதிர்காமம் போய்வந்ததுதான் காரணமென்கிருர் ஒரன்பர். அது எப்படியாயினும் இதுவரை வராத பிரதமர் இங்கு நம்மைப் பார்க்கவருவதால், அவரை வரவேற்க, அழைப்பும் கிடைத்தும் போகாதிருக்கலாமா?

மேலும் இந்த அழைப்பில் ஒரு விசேஷம். இதில் தமிழுக்குத்தான் முதலிடம் தந்திருக்கிருர்கள் முதலில் தமிழ், அடுத்து சிங்களம், மூன்ருவதாக ஆங்கிலம்.

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேர்னன் அபயசேகரா, ஒரு சிங்களவராக இருந்தும் இந்த அழைப்பில் துணிச்சலுடன் தமிழுக்கு முதலிடம் அளித்ததற்காகஅவரை பாராட்டவேண்டும். தமிழ்ப்பகுதியிலே தமிழுக்கு முதலிடம் கிடைக்கவேண்டியது இயற்கைதானே!

ஃ ஃ ஃ

ஊரெல்லாம் ஒரே திருவிழாக்கோலம்! இப்பேர்ப்பட்ட ஒருகாட்சியை யாழ்ப்பாணம் சமீபத்தில் கண்டதில்லை. ரயில்வே ஸ்டேஷனிலிருந்து இனிமையான நாகசுர இசை வருக வருக என்று வரவேற்றது. ஸ்டேஷன் வெளியிலே பெருங்கூட்டம். ஆசனங்கள் அமைத்து ஒலிபெருக்கிகளையும் வைத்திருந்ததால் பிரதமர் இங்கு பேசப்போகிருர் என்பது தெரிந்தது.

உள்ளே பிளாட்பாரத்தையும் விசேஷமாக அலங்கரித்து எல்லா ஏற்பாடுகளையும் மிகக் கச்சிதமாக செய்திருந்தனர். இதற்காக அரசாங்க அதிபரையும், பல காரியாதிகாரிகளையும், கச்சேரி சிப்பந்திகளையும் பாராட்டவேண்டும்.

விமானநிலையத்தில் வரவேற்பை வைத்திருந்தால் இவ்வளவு ஜனங்கள் சலந்து கொண்டிருக்கமுடியாது. விசேஷ ரயிலில் பிரதமர் வந்ததும் நல்லதாயிற்று. எல்லாம் நன்மைக்குத்தானே!

10-30க்கு முன்னதாகவே பிரமுகர்கள் பலரும் வந்து தங்கள் ஆசனங்களில் அமர்ந்து, பிரதமரை ஆவலுடன் எதிர்நோக்கி இருந்தனர். முதல்வரிசையில் முதலில் நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராஜா, அடுத்து தமிழ்க்காங்கிரஸ் தலைவர் ஜி ஜி, பக்கத்தில் செனேட்டர் நடராஜா, பிறகு தமிழரசுத் தலைவர் எஸ். ஜே. வி யும் தமிழ் எம். பி.க்களும். சேராததெல்லாம் சேர்ந்திருந்தன. ஆனாலும் அவர்கள் மனம் என்னென்ன எண்ணினவோ! அவ்வளவு பக்கத்திலிருப்பதால் ஒருவரைப் பார்த்து ஒருவர் புன்முறுவல் பூக்கவோ, ஒரு வார்த்தை பேசவோ செய்வார்

(4-ம்கலம் பார்க்க)

(5ம்கலத்தொடர்ச்சி)

களா என்று ஆவலுடன் கவனித்துக்கொண்டிருந்தேன். பயனில்லை. "உம" என்ற இந்தக் காட்சி நல்லவேளையாக மாறியது. விசேஷ ரயிலும் வந்துவிட்டது.

ஃ ஃ ஃ

இரு கைகளையும் கூப்பிக் கொண்டு, புன்முறுவல் பூத்த முகத்துடன் பிரதமர் ரயிலிலிருந்து இறங்கினர் அவர் உடல் நலம் நம்மில் பலரும் கவலைப்பட்டபடி இல்லை. நன்ருக இருப்பதைக் காண மகிழ்ச்சியாக இருந்தது.

சீதாராம சாஸ்திரியார் சம்ஸ்கிருதத்தில் ஆசீர் வசனங்களை வழக்கம்போல் கோஷித்தார். பலருக்கு இது புரியாவிடினும், பிரதமருக்குப் புரிந்ததென்பது அவரது முகத்திலிருந்து தெரிந்தது.

பிரதமரைக் கண்டதும், வெளியில் காத்திருந்த பல்லாயிரக்கணக்கான மக்களும் பலத்த கரகோஷங்கள் செய்து தங்கள் மகிழ்ச்சியையும் வரவேற்பையும் தெரிவித்தனர்.

எல்லா மதத்தவரும், இனத்தவரும், சாதியினரும் ஆண்களும், பெண்களும், தொழிலாளி, முதலாளி, பணக்காரர், ஏழை முதலிய சகலரும் இந்தச் சரித்திர பூர்வமான வரவேற்பில் கலந்துகொண்டிருந்தனர். இத்தனை பேர் மனதைக் கவர்ந்துள்ள பிரதமர் டட்லியின் ஒற்றுமைச் சக்தான் எவ்வளவு! அவர் நீடுழி வாழ்க!!

ஃ ஃ ஃ

ஆனைவாறென ஆடுகின்ருன்முடி, வானையாறு வளாவது காண்மினோ, நான் ஐயாறுபுக் கேற்கலன் இன்னும் [illegible] தாலே யொக்குமே.

— அப்பர்சுவாமிகள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'சுதந்திரத்தைப் பேண ஐக்கியம் அவசியம்'

## யாழ். ரயில் நிலையத்தில் பிரதமர்

### ஜாதி, மத, இன, அரசியல் பேதமின்றி அனைவரும் கலந்துகொண்ட அற்புதக்காட்சி

— நமது நிருபர்கள் கா. யோகநாதன், ஈ. கே. ராஜகோபால் —

யாழ்ப்பாணம், செவ்வாய்

சுதந்திர இலங்கையின் சரித்திரத்தில் தேசீய அரசாங்கத்தை முதன் முதல் அமைத்து தேசீய ஐக்கியத்தை உருவாக்கியுள்ள திரு. டட்லி சேனநாயக்கா முதல் முறையாக இன்று முற்பகல் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தபொழுது யாழ்ப்பாணக் குடாநாடே திரண்டு நின்று அவரை வரவேற்பளித்ததுபோன்று ஆயிரமாயிரம் மக்கள் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் அமோக வரவேற்பளித்தனர்.

தமக்களிக்கப்பட்ட உற்சாகமான வரவேற்புக்கு நன்றிதெரிவித்துப் பிரதமர் பேசுகையில், நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும் பொருளாதாரசுதந்திரம் அடைவதற்கும் தேசிய ஐக்கியம் அவசியமென்பதை பிரதமர் வலியுறுத்தினார்.

"பதினெட்டு வருடங்களுக்குமுன், 1948-ம் ஆண்டில், அண்டை நாட்டினர் தமது சுதந்திரப் போராட்டத்தில் எத்தனையோ உயிர்களை இழந்து பெரும் இன்னல்களுக்காளாகி விடுதலைபெற்றபோது, இரத்தம் சிந்தாமல், ஒருயிர் தன்னும் இழக்காமல் இலங்கை தனது சுதந்திரத்தைப் பெற்றது." என்றும் பிரதமர் கூறினார்.

பிரதமர் மேலும் கூறியதாவது:-

"அந்நேரத்தில் இந்நாட்டில் நிலவிய சமூக, மத ஒற்றுமையே இலங்கை இரத்தம் சிந்தாது சுதந்திரம் பெறுவதற்கான முக்கிய காரணமாகும் அரசியல் சுதந்திரம் பெறுவதற்கு இந்தச் சமூக சௌஜன்யம் இவ்வளவு தூரம் உதவியிருக்குமெனின், எந்த ஒரு முன்னேற்ற நாட்டுக்கும் அவசியமான பொருளாதார சுதந்திரத்தை நாம் பெற இந்தச் சமூக ஒற்றுமை இன்னும் எவ்வளவு தூரம் தேவை என்பதை மக்கள் உணர வேண்டும்

நல்ல ஸ்திரமான பொருளாதார அத்திவாரம் இல்லாத நாடுகளால் ஜனநாயக முறை அரசாங்கத்தைக் கொண்டு நடாத்த முடியாமையைச் சரித்திரம் காண்பிக்கிறது.

இலங்கையிலும், 18 வருடங்களுக்குமுன் கிடைத்த அரசியல் சுதந்திரம் ஸ்திரமானபொருளாதாரம்இல்லையேல், ஆபத்திலேயே இருக்கும்.

அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டத்திலும் பார்க்கப் பொருளாதாரச் சுதந்திரத்திற்கானபோராட்டம் கடுமையானது என்பதை மக்களுக்குநினைவூட்ட விரும்புகிறேன்

பொருளாதாரச் சுதந்திரத்துக்கான இலங்கையின் இந்தப் போராட்டம், மோசமான நிலையை அடைந்துள்ளது.

இந்நாட்டின் முக்கியமான பல பிரச்னைகளைத் தீர்க்க வேண்டியதன் அவசியத்தை எனது அரசாங்கம் பூரணமாக உணர்கிறது

நாட்டில் இதுவரை காலமிருந்து வந்த பலஹீனமான அபிவிருத்தித் திட்டங்களே இப்பிரச்னைகளுக்குக் காரணமாகும். தனியார் துறையிலும் சரி, பொதுத்துறையிலும் சரி, இத் திட்டங்கள் பலஹீனமாக அமைந்ததால் தான் வாழ்க்கைச் செலவு இவ்வளவு தூரம் உயர்ந்துள்ளது.

நான் பதவிக்குவந்தகாலை, இந்நாட்டின் வெளிநாட்டு முதலீடுகள் மிகக்குறைவான நிலைக்கு வந்திருந்ததன் காரணமாகவே, இங்குள்ள முக்கிய தேவைகளுக்கு உதவிபெறுமுகமாக நான் பிட்சாபாத்திரத்துடன் பிற நாடுகளுக்குச் செல்ல வேண்டி ஏற்பட்டது.

ஒவ்வொருவருடமும் இப்படிப் பிறநாடுகளிடம்உதவி பெறுவதை இந்நாடு எதிர்பார்த்திருக்கமுடியாது. உடனடியாக ஓர் பலம் வாய்ந்த அபிவிருத்தித் திட்டமொன்றை இலங்கைசெயற்படுத்தவேண்டும்.

இந்நாட்டில் அபிவிருத்தியை முன்னிட்டு மக்களும் சில தியாகங்களைச் செய்ய ஆயத்தமாக இருக்கவேண்டும்.

குழந்தைகள்உள்ளவர்கள் தான் இத்தியாகங்களின் அவசியத்தை என்னிலும் பார்க்க உணர வேண்டும். ஏனெனில் எனக்குக் குழந்தைகள் கிடையா.

மக்களிடமிருந்து இந்த ஒத்துழைப்பு முன்வருமேயானால், நல்லதோர் திட்டமிடப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் இவ்வரசாங்கம் பொருளாதார சுதந்திரத்தைப் பெற்றுத் தருமென்பதை இந்த நான் உறுதிகூற விரும்புகிறேன்."

### "உழைப்பு மிகுந்தவர்கள் யாழ்ப்பாண மக்கள்"

"நான்யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்வது இது முதல் தடவையல்ல. விவசாய மந்திரியாக நான் இருந்தபோது யாழ்ப்பாணத்துக்கு ஒரு முறை வந்திருக்கிறேன். யாழ்ப்பாண மக்களின் பெருஞ்செல்வம் விவசாயம் தான் என்பது எனக்குத் தெரியும். நெற்றிவியர்வை நிலத்தில் சிந்த பொருளாதாரத்தைப் பெருக்குவதற்காக உழைப்பவர்கள் இங்குள்ளவர்கள்"

பிரதமந்திரி என்ற முறையில் இந்த நாட்டில் வாழும் எல்லாச் சமூகத்தினருடைய சுபீட்ச வாழ்வுக்காக இன மத பாகுபாடற்ற முறையில் செயலாற்றுவேன்

உங்களுடைய உழைப்பு ஒத்துழைப்பு, பிரயாசம் தான் இந்நாட்டை உயர்த்தும், முன்னேற்றும்.

உங்களுடைய முற்போக்கான வாழ்க்கை முறையை தென் இலங்கை மக்கள் பின்பற்றவேண்டும். நீங்கள் எனக்களித்த இந்தப் பிரமாண்டமான, மகத்தான வரவேற்பை என்றும் மறக்க மாட்டோம்.

உள்ளும் புறமும் அலங்கரிக்கப்பட்டு பெரும் விழாக்கோலம் கொண்டிருந்த யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவை ஏற்றிக்கொண்டு வந்த விசேஷ ரயில் சரியாக 11.05 க்கு முதல் பிளாட் பாரத்தின் ஓரமாக வந்துநின்றது. ரயில் நின்றதும் பிரதமர் முதலில் கீழே இறங்கினர். ரயில் நிலைய அதிபர் பிரதமருக்கு முதன் முதலில் மாலை சூட்டினார். இதன் பின் யாழ். அரசாங்க அதிபர் திரு.வேர்ணன் அபயசேகரா பிரதமருக்கு மாலை சூட்டி வரவேற்றார். யாழ்ப்பாண நாகவிகாரை பிரதம குரு வண.ஸ்ரீ நந்தாராம நாயக்க தேரோ பன்சில் ஓதினார். ஸ்ரீ கீதாராம சாஸ்திரியார் சிவசின்னங்கள் அளித்து பிரதமரை ஆசீர்வதித்தார்.

### நீதியரசர், எம். பி.க்கள் பிரமுகர்கள்

ரயில்நிலையத்தின் உள்ளே ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஆசனங்களின் முதல்வரிசையில் நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராசா, ஜி ஜி. பொன்னம்பலம், தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த செனட்டர் நடராசா, திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், டாக்டர் ஈ. எம் வி. நாகநாதன், ஏ. அமிர்தலிங்கம், வி. என். நவரத்தினம், வி. நவரத்தினம், பண்டிதர் கா பொ. இரத்தினம் சி. கதிரவேலுப்பிள்ளை மற்றும் முஸ்லிம், பௌத்த இந்துபிரமுகர்கள் அமர்ந்திருந்தனர். இவர்களுக்குப் பிரதமர் கைகொடுத்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

உள் மேடையின் இன்னொருபக்கத்தில் ஏற்கனவே காலையில் வந்துசேர்ந்த மந்திரிகளும், உதவி மந்திரிகளும் அமர்ந்திருந்தனர். இவர்களுடன் யாழ்ப்பாண மாநகரசபையின் முன்னாள் மேயர்கள், அங்கத்தவர்களும் மற்றும் அதிகாரிகளும், பிரபல வழக்கறிஞர்கள் பலரும் வந்திருந்தனர்

வடபிரதேச சாரணியக்கத்தைச் சேர்ந்தவர்கள் ரயில் நிலையத்தில் அணிவகுத்து நின்று மரியாதை செய்தனர்.

ரயில் நிலையத்திற்கு வெளியே அமைக்கப்பட்டிருந்த அழகுமேடைக்கு பிரதமர் அழைத்துச்செல்லப்பட்டார் புகையிரத நிலைய முன்றல் வர்ணக்கோலம் பூண்டிருந்தது. கட்டுமீறிய மக்கள் கூட்டத்தைப் பொலிசார் சிரமத்துடன் கட்டுப்படுத்து வதிலீடுபட்டிருந்தனர்.

வெண்ணிற ஆடை அணிந்த பள்ளிச் சிறுமிகள் பிரதமரை வரவேற்க வெளியே நிரைப்படுத்தி நின்ற காட்சி இனியதாக விருந்தது.

இச் செய்தி நேற்றைய விசேஷ பதிப்பில் வெளியானது.



யாழ். ரயில் நிலையத்தின் அலங்காரங்களை பிரதமர் பார்வையிட்டபடி சிந்தனையிலாழ்ந்திருக்கிறார்.

## நான் இங்குவருவதற்கு தேசீய ஆட்சியே காரணம்

### நாகவிகாரை வரவேற்பில் பிரதமர்

— நமது சிறப்பு நிருபர் எச். நாணயக்கரா —

யாழ்ப்பாணம், புதன்

"தேசிய அரசாங்கம் ஆட்சியிலிருப்பதால்தான் நான் இன்று இங்கு வரமுடிந்தது. என்னை யாழ்ப்பாணத்துக்கு அழைத்த தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு ஜி ஜி பொன்னம்பலத்துக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்".

பிரதமர் டட்லி சேனநாயக்கா நேற்று பகல் யாழ்ப்பாணம் பௌத்த ஸ்ரீ நாகவிகாரையில் சிங்கள மக்களால் அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினார்.

இதுவரை சிங்கள பௌத்தசங்கமும், தமிழ் பௌத்த சங்கமும் வரவேற்றது. பிரதமருடன் மந்திரிகள் பிலிப்குணவர்த்தன, திரு. சி. பி. டி. சில்வா, வெலகெதர மற்றும் பல எம். பிக்களும் சமூகமளித்திருந்தனர். பிரதமருக்கு மகிழ்ச்சி தெரிவிக்குமுகமாக மலர்கள் அளிக்கப்பட்டன

கடவத்துவ நந்தாராம நாயக்கத்தேரோ (வடமாகாணம்) அளிக்கப்பட்ட வரவேற்புக்கு தலைமைவகித்தார். பிரதமரையும் மற்றும் மந்திரிகளையும் அவர் வரவேற்றுப் பேசினார்.

பிரதமர் டட்லி சேனநாயக்கா மேலும்பேசுகையில் கூறியதாவது:

போயா தினங்களை நாம் அரசாங்க விடுமுறை தினங்களாக்கியதற்குக் காரணம், பௌத்தர்களுடைய ஆதரவு மட்டும் இருந்ததால் மட்டுமல்ல, கத்தோலிக்க இறிஸ்தவர்களுடைய பரிபூரண ஆதரவும் இருந்ததால்தான்! அரசாங்கத்தின் கொள்கையை அவர்கள் ஏற்றுக்கொண்டனர்,

பௌத்த மக்களுக்கு பிரதமர் ஒரு வேண்டுகோளையும் விடுத்தார்.

இனமத பாகுபாடின்றி எல்லோரும் ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் வளர்க்கவேண்டுமென்று பிரதமர் கேட்டுக்கொண்டார்.

### குருபூசை

கைதடி, புதன்

கைதடி இந்து வாலிப சங்கத்தின் ஆதரவில் மூர்த்தநாயனார் புகழ்ச்சோழர் நாயனார் குருபூசை கைதடி மதிமூர்த்தியாவர்த்தைக் கந்தசுவாமி கோயிலில் இன்றுமாலை நடைபெறவிருக்கிறது. திரு. வி. ஆறுமுகத்தின் 'வள்ளி திருமணம்' என்னும் கதாகாலட்சேபமும், சொற்பொழிவுகளும் விழாவில் இடம்பெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய் பரப்பும் நத்தைகள்

வெப்ப மண்டலத்திலும் மிதவெப்ப மண்டலத்திலும் உள்ள நாடுகளில் வாழும் மக்கள் சுமார் இருபது கோடிப் பேர்கள் 'பில்ஹார்ஸியா' என்ற ஒருவகை சோகைநோயால் வருந்துவதாக மதிப்பிட்டிருக்கிறார்கள். முறைக்காய்ச்சலை உண்டாக்கும் கிருமிகள் கொசுக்கள்மூலம் பரவுவதைப் போல இந்த நோய்க்கும் காரணமான கிருமிகள் நத்தைகள்மூலம் பரவி மனிதர்களைத் தாக்குகின்றன. கொசு ஒழிப்பின் மூலம் முறைக்காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதைப்போல, நத்தைகளை ஒழித்து இந்த நோயை பரவாமல் தடுத்துவிடமுடியும்.

நோய்க்கிருமிகளைப் பரப்பும் நத்தைகளை ஒழிக்கக்கூடிய ஓர் ரசாயனப் பொருளை அபிவிருத்தி செய்யும் தென்கிழக்கு இங்கிலாந்தில் உள்ள ஸிட்டிங்போர்ன் என்ற இடத்திலிருக்கும் ஷெல் அக்ரிகல்சுரல் ரிசர்ச் சென்டரைச் சேர்ந்த விஞ்ஞானிகள் தொடர்ந்து ஆராய்ச்சிசெய்து 'என்-ட்ரிடில்மார்ஃபோலின்' என்ற ரசாயனப்பொருளைக் கண்டுபிடித்தார்கள். களப் பரிசோதனைகளை நடத்தி இதனுடைய ஆற்றலை உறுதிப்படுத்திக்கொண்டார்கள்.

நோய்க் கிருமிகளை எடுத்துச்செல்லும் நத்தைகள் நீர் தேங்கிக் கிடக்கும் பகுதிகளிலும் பாசன வாய்க்கால்களிலும் வசிக்கின்றன. விவசாயிகள் நீரில் நடந்து செல்லும்போது, இந்த நோய்க் கிருமிகள் கால்விரல் இடுக்குகளில் தங்கி, சருமத்தைத் துளைத்துக்கொண்டு உடலில் புகுந்து குருதியைக் குடித்து சோகையை உண்டாக்குகின்றன. நோயைக் குணப்படுத்தினாலும் அது மீண்டும் மனிதனைத் தாக்கும் வாய்ப்பு இருப்பதால், நோய்க் கிருமிகளைப் பரப்பும் நத்தைகளை ஒழிப்பதே சாலச் சிறந்தது.

விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கும் 'என்-ட்ரிடில்மார்ஃபோலின்' என்ற ரசாயனப்பொருளை தொடர்ந்து சிலதினங்கள் வரையில் உபயோகித்தால் நத்தைகள் அழிந்துவிடுகின்றன. இந்த ரசாயனப்பொருளை மிகவும் குறைந்தசெலவில் தயாரித்துவிடலாம். இது நத்தைகளைத்தவிர மற்ற உயிரினங்களையோ தாவரங்களையோ அழிப்பதில்லை என்பதும் இதைத் தொடர்ந்து உபயோகிப்பதால் மனிதர்களுக்குத் தீங்கு ஏதும் இல்லையென்பதும் பரிசோதனைகள் மூலம் தெரிந்தது. நீரில் இந்த ரசாயனப் பொருள் பத்துலட்சத்தில் ஒரு துளி கலந்து ஒருமணிநேரம் இருந்தால் நத்தைகள் செத்துவிடுகின்றன. தேக்கமான நீரில் இந்த ரசாயனப் பொருளை இன்னும் குறைந்த அளவில் உபயோகித்து நத்தைகளை ஒழித்துவிடலாம்.

சிலமணி நேரத்தில் நத்தைகள் அழிந்துவிட்டாலும் அவற்றின் முட்டை அழிவதில்லை. முட்டையின் ஓடு கனமாக இருப்பதால் ரசாயனப் பொருளால் அவற்றுக்குக் கேடு நேருவதில்லை.

முட்டைகள் பொரித்து நத்தைகள்தோன்றும்போது மீண்டும் அபாயம் ஏற்படுகிறது. நீர்த் தேக்கத்தின் தலைக்காலில் இந்த ரசாயனப் பொருளை தொடர்ந்து பல வாரங்கள் உபயோகித்தால், இது நீர்த்தேக்கத்தின் மூலை முடுக்குகளில் பரவி நத்தைகளை அழித்துவிடுகின்றது; தொடர்ந்து உபயோகித்தால் முட்டைகள் பொரித்து வெளிவரும் நத்தைகளும் மாய்ந்துவிடுகின்றன. பரீட்சார்த்தமாக நடத்திய சோதனைகளிலிருந்து இந்த முறை மூலம் நத்தை ஒழிப்பு மருந்தை உபயோகிப்பதில் நல்ல பயனுண்டு என்பது உறுதிப்பட்டது. தொழில் நுட்பப்பயிற்சியில்லாத இரண்டு ஊழியர்கள் மூலம் நீர்த்தேக்கத்தின் தலைக்காலில் இந்த மருந்தை கலக்கமுடியும். இதனால் பயிருக்குத் தீங்கு ஏதும் இல்லை. டான்ஸானியாவிலுள்ள ஓர் கரும்புத் தோட்டத்திலும் ரொடீஷியாவில் ஓர் கழனியிலும் எகிப்தில் ஓர் இடத்திலும் இந்த முறையை ஆண்டு மருந்து தெளித்ததில் சிறந்த பயன் கிடைத்தது.

ஆறு நீர்த் தேக்கங்களில் என்-ட்ரிடில்மார்ஃபோலினை கலந்து நத்தைகளையே ஒழித்தார்கள். ஓராண்டுக்குப் பிறகுகூட அவற்றில் நத்தைகள் தலைகாட்டவில்லை என்பது அண்மையில் நடத்திய ஆய்விலிருந்து தெரிந்தது.

— சிவாஜி

---

(5-ம் கலத் தொடர்ச்சி)

மிக அபூர்வம். அதற்கு கடும் உழைப்பும், தியாகமும், கஷ்டங்களைச் சகித்துக்கொள்ளும் மனப்பக்குவமும் தேவை.

ஃ ஃ ஃ

### பெரியோர் வாழ்வு

கிணற்றில் இறக்கப்படும் பாத்திரம் காலியாக இருக்கும். அது மீண்டும் மேலே வரும்போது நிறைந்துவழியும். வெளியில் வந்தவுடன் தன்னில் நிறைந்துவிட்ட அத்தனையையும் பிறர் நன்மைக்காகக் கொட்டிவிட்டு மீண்டும் காலியாகிவிடுகின்றது. அப்பாத்திரம். பெரியோரின் வாழ்வும் இத்தன்மையதுதான். வரும்போது அவர்கள் ஒன்றும் கொண்டு வருவதில்லை. உலகுக்கு வந்ததும் இங்கு கிடைக்கும் சொத்து, அறிவு, ஞானம் எல்லாவற்றையும் சேர்த்து வைத்து கடைசியில் பிறருக்காகவே வாரிவழங்கிச் செல்கிறார்கள்.

—பேனு

---

# பூர்வ ஜன்ம ஞாபகம் ஏற்படுவது எப்படி?

— விஜயா சங்கரநாராயணன் —

**உடலை விட்டு பிரிந்து செல்லும் ஜீவன் சில சமயம் பிறவியின் சில தனித் தன்மைகளைத் தன்னுடன் எடுத்துச் செல்லுமானால் மறுபிறவியில் பூர்வஜன்ம ஞாபகம் ஏற்படுமாம். மகான் அரவிந்தரின் கருத்துக்களை மேலும் விளக்குகிறார் கட்டுரை ஆசிரியை.**

உடலை விட்ட ஜீவன் கடந்த அனுபவங்களின் சாராம்சத்தை நினைவில் வைத்துக்கொள்ளும். ஆனால் சென்ற பிறவியின் முழு விபரங்களையும் நினைவில் வைத்துக்கொள்வதில்லை. சிலசமயம் பிறவியின் சில தனித்தன்மைகளைத் தன்னுடன் எடுத்துச் செல்லுமானால் மறுபிறவியில் பூர்வ ஜன்ம ஞாபகம் ஏற்படும். நாம் ஒரு ஜன்மத்தில் உயர்தரக் கல்வியை அடைகிறோமென்று வைத்துக்கொள்வோம். அப்போது கற்றதனாலாய பயனை நம் ஜீவன் சுமந்துசெல்கிறது. ஆனால் நாம் கற்ற கல்வியை அப்படியே முழு விபரங்களுடன் சுமந்து செல்வதில்லை நமது மனோமய ஆற்றல்கள் சிலவற்றை அவை எடுத்துச் சென்றிருக்குமானால் முன்பு கற்ற விவரங்கள் கூட மறுபிறவியில் தெளிவாக நினைவுக்கு வரலாம் விசேஷமாக குழந்தைப் பருவங்களில் அநேகருக்குத் தமது முன் பிறவியின் நிகழ்ச்சிகள் கூட அவ்வப்போது நினைவுக்கு வரும். ஆனால் நவீனச் சூழலும் கல்வியும் அந்நினைவை மறக்கடித்துவிடுகின்றன. சிலருக்குத் தம் பூர்வஜன்ம நினைவு ஒரு மின்வெட்டுப்போல் வந்துவிட்டுப் போகக்கூடும்; மாறுபட்ட சூழ்நிலையால் பிறகு மறந்துபோய்விடும். யோகதிருஷ்டியுடையவர்களுக்குத் தமது பூர்வ ஜன்மங்களை அறிவது கடினமல்ல. ஆனால் சாதாரண ஜீவன்களுக்கோ மேற்கூறிய காரணம் எதுவாயினும் இருந்தால்தான் முற்பிறவி நினைவுக்கு வரும். எப்படியும் எந்த ஜீவனும் தனது பிறவி அனுபவத்தின் நல்ல அம்சங்களை உபயோகிக்கவே செய்கிறது. ஸம்ஸ்காரம் எனப்படும் இந்த அனுபவக் கல்விப் பயன் அதனுடைய அடுத்த பிறவிகளில் கைகொடுத்து உதவவே செய்யும்.

### பிறவி எடுத்தல்

தனது பரிணாம காரியம் செவ்வனே நடப்பதற்காக ஜீவன் தனக்கு எதெது தேவையோ அதை எடுத்துச் சென்று மீண்டும் திரும்பக் கொணரும். அது ஒவ்வொரு பிறவியிலும் படிப்படியாக முன்னேறியே வரும், ஆனால் சிலசமயம் பின்னோக்கியும் செல்லும் சீராகாத சில காரியங்களைச் சீராக்குவதற்காக, பூர்த்தியடையாத சில பாகங்களைப் பூர்த்தி செய்வதற்காக அது ஏறக்குறைய முன்போன்றதொரு பிறவி எடுக்கிறது தன்னைப் புடம்செய்து கொள்வதற்காகவே அது இவ்வாறு செய்கிறது.

### மறுபிறவியில்

ஆனால் ஒன்று கவனிக்க வேண்டும். ஒருவன் ஒரு பிறவியில் இருந்தது போலவே மறுபிறவியிலும் இருக்கவேண்டும் என்பதில்லை. ஒரு பிறவியில் ஒருவன் ராமனாகப் பிறந்தால் அவன் அடுத்த பிறவியிலும் அதே ராமனாக, அவனுடைய அதே பழையநடையுடை பாவனைகளோடு இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை. தான் முன்பு விட்ட குறையைப் பூர்த்திசெய்வதற்காகப் புதிய தோற்றத்தோடு புதிய பாவனைகளோடு அவன் பிறக்கலாம். கவியாகப் பிறந்த ஒருவன் மற்ற ஒன்றிரண்டு பிறவிகளில் கூடக் கவியாகப் பிறக்கக்கூடும், ஆனால் முன்பு செய்த காரியங்களை அதே ரீதியில் செய்யமாட்டான். புதிய முயற்சியில் புதிய இலக்கியங்களை அவன் படைக்கலாம். தான் முன்பு உள்ளடக்கி வைத்திருந்த ஆர்வத்தை நிறைவேற்ற, வெளிப்படாத ஆற்றல்களை வெளிப்படுத்தவேண்டி, அவன் மறுபிறவிகளில் கவியாகப் பிறந்திருக்கலாம். அதற்குப் பிறகு எடுக்கும் பிறவிகளில் கவிதைத்தொழிலையே அவன் விட்டுவிடக் கூடும்; ஜீவனை மேலே உயர்த்தும் அத்யாத்ம வாழ்வை மேற்கொள்ளலாம்.

(மிகுதி அடுத்த வாரம்)

---

# பொன் வயல்

## நான்கு நல்ல வார்த்தைகள்

### சிறப்பு அம்சம்

வாழ்க்கையில் ஏற்படும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் உள்ள சிறப்பு அம்சங்களையே தேடி அனுபவித்து மகிழப் பழகிக்கொள்வோம். அதனால் வாழ்க்கை சோபிக்கும். சிறப்பற்ற அம்சங்களையே துருவித்தேடிப் பார்ப்பதின் மூலம் வாழ்க்கையை மேலும் மோசமாக்கிக் கொள்கிறோம்.

ஃ ஃ ஃ

### பிறருக்காக

வாழ்க்கை என்பது பிறருக்காகவும், சமூகத்துக்காகவும் நம் சக்திக்கேற்ப ஏதோ ஒரு வகையில் சேவைபுரிவதாக இருக்கவேண்டும் நம்முடைய நல்லசெயலால் பிறர் நன்மை பெறுகிறார் என்று அறியும் போது ஏற்படும் உணர்ச்சியைப் போல் இன்பந்தருவது யாது?

ஃ ஃ ஃ

### பிறக்கும்போது

பிறக்கும்போதே பணக்காரனாய்ப் பிறப்பது மனித வாழ்வில் சர்வ சாதாரண ஒரு நிகழ்ச்சி ஆனால் பிறக்கும்போதே அறிஞர்களாயும், மகான்களாயும், சிறந்த தலைவர்களாயும் ஆகிவிடுவது மிக

(2-ம் கலம் பார்க்க)

---

# ஐந்து எண்ணின் அற்புதத் தன்மை

எண்களைக் கொண்டு வாழ்க்கையின் நெளிவு சுளிவுகளை கணிக்கும்அறிஞர்கள் 5என்றஎண்ணை மிகவும்அற்புதம் நிறைந்த ஒன்றாகக் கருதுகிறார்கள். மனிதர்களை 9 எண்களின் கீழ் பிரித்துக் கணிப்பதுபற்றிமுன்னர் ஒரு கட்டுரையில் விளக்கப்பட்டது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். இந்த 9 எண்களுக்கும்நடுநாயகமாக 5எண் விளங்குகிறது. 4, 6, 8 எண்களைப் போல் இதனை இரண்டாகப் பிளக்கவியலாது. இந்த எண் பராசக்தியின் அற்புத மந்திரங்களை குறிப்பதாகவும் அதனால்தான் விக்கிரமாதித்தன் இந்த எண்ணை வெகுவாகப் பாவித்து வெற்றிகண்டான் என்றும் ஒரு இந்திய அறிஞர் விளக்குகிறார்.

இந்த எண் சிறப்பாக ஒருவருக்கு அமைந்து பலன் தருமானால் அந்த மனிதர் வியக்கத்தக்க சக்திகள் படைத்தவராக விளங்குவார். மனிதர்கள் எல்லாம் மந்திரசக்திபோல் கட்டுப்படுவார்கள் இளமை மாறாத தோற்றமிருக்கும். எல்லோராலும் விரும்பப் படுவர் மிக [illegible] முன்னேறுவதற்குத் திட்டங்கள் தீட்டுவதுடன் இருப்பவர்கள் இவருடைய தீட்சண்ய அறிவின் சிறப்பைக்கண்டு வியப்பார்கள். சிறுவயதில் தீயோர் நட்பு ஏற்படின் அவர்களின் குணங்கள் அமையப்பெற்றுக் கெடுவார்கள் எனினும் வெற்றிவீரர்களாய்த் திகழ்வர். இவ்வாறெல்லாம் இந்த எண்ணினால் ஆளப்படுகிறவர்கள் பற்றிக் கூறப்படுகிறது.

காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் நேரு 14ந் தேதி பிறந்தவர். அதாவது 1+4=5 எண்ணின் ஆட்சிக்குட்பட்டவர். பிறரால் செல்லமாக அழைத்த அறிமுகமான பெயர் Nehru என்பது. இதன் எண் 23 அதாவது 2+3=5 எண். எனவே அவர் 5 எண்களின் பூரண ஆதிக்கம் பெற்றவராய் வாழ்ந்தார். (M G Ramachandran) எம். ஜி ராமச்சந்திரன் என்ற பெயரின் எண் 41. அதாவது 4+1=5 எண் தான் என்பதைக் கவனிக்கவும். வியாபாரத் துறைகளில் இந்த எண் உடையவர்களே பெரிதும் வெற்றிவீரர்களாய்த் திகழ் [illegible]

---


உறுதியானதும்
நீடித்து உழைப்பதும்
தன்னிகரற்றதுமான

**"வைத்திலிங்கம்ஸ்"**

இரும்பு - பித்தளை மர ஸ்குறு ஆணிகளை

நீங்கள் வாங்குவதனால்
ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு
உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்
என்பதை மறவாதீர்கள்.

தயாரிப்பாளர்கள்:-

**என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்**

இரும்பு வியாபாரிகள்
450, பழையசோனக தெரு, கொழும்பு-12
தொலைபேசி: 7143 — 2029

கிளை: 138, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவிட்டபுரம்

# ஸ்ரீ கந்தசுவாமி கோயில் கப்பல் திருவிழா

## ஆகஸ்ட் 18-ல் நடைபெறும்

யாழ்ப்பாணம், புதன் மாவிட்டபுரம் ஸ்ரீ கந்த சுவாமிகோவிலில் கடந்த வருடம் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட கப்பல் திருவிழா இம்மாதம் 18-ம் தேதி வியாழக்கிழமை காங் கேசன்துறைக்கடலில் நடை பெற விருக்கிறது. அரைலட்சத்துக்கு மதிக மான மக்கள் இத்திருவிழா வைக்கண்டு மகிழ ஏற்பாடு கள் செய்யப்பட்டுள்ளன. மக்களுக்கு வேண்டிய பாது காப்பு வசதிகள், போக்கு வரத்து வசதிகள் என்பன விரிவான முறையில் செய் யப்பட்டுவருகின்றன.

தென்னிந்தியாவிலிருந்து முருகப்பெருமான் காங்கே சன்துறை வந்து இறங்கிய சரித்திரத்தை இக்காலத்தவ ருக்கு உணர்த்தும் வகை யில் ஏற்பாடு செய்யப்படும் இத்திருவிழா சரித்திரச் சிற ப்புவாய்ந்தவொன்றாகவிருப் பதனுல் திருவிழா சிறப்பாக நடைபெற எல்லா ஒழுங்கு களும் செய்யப்பட்டிருக்கின் றன.

இத்திருவிழாவின் நோக் கத்தைச் சித்தரிக்கும் வகை யில் இம்மாதம் 15-ந் தேதி மாலை 5 மணிமுதல் 5-15 மணிவரை இலங்கை வானொ லியில் 'காங்கேயன் வந் தான்' என்றசிறப்பு நிகழ்ச் சியினைக் கேட்கலாம். தமிழ் மணி எஸ். கணேசசுந்தரன் குழுவினர் வில்லிசையாக இந்தக் கதையைச் செய்ய விருக்கிருர்கள்.

15-ம்தேதி காலை 8 மணி முதல் 10-30 மணிவரையும் மாலை 4 மணிமுதல் 6 மணி வரையும் மாவிட்டபுரம் தேர்உற்சவ நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி அஞ்சல் செய்யவிருக்கிறது.

கப்பல் திருவிழா நிகழ்ச்சி களையும் ஒலிப்பதிவு செய்து ஒலிபரப்பும்படி இலங்கை வானொலிப்பகுதியினர் கோரப்பட்டுள்ளனர். கப் பல் திருவிழாவின்போது சென்னை 'கலைமகள்' ஆசிரி யர் வித்துவான் கி. வா. ஜகந் நாதனின் முன்னுரையுடன் கூடிய 'கோவிற்கடவை' நூல் வெளியிடப்படும்.

கப்பல் திருவிழாவன்று முருகப்பெருமானும் கவித் துறை விநாயகனும் அலங்க ரிக்கப்பட்ட வள்ளங்களில் கடலில்பவனிவருவர். கடற் கரையில் விசேஷ நிகழ்ச்சிக ளும் ஏற்பாடாகியிருக்கின் றன.

# 'வள்ளலாரும் நாவலரும் முரண்பாடுகொண்டவர்களதனுல்?'

## ம. பொ. சி. விளக்கம்

வெள்ளவத்தை, செவ். 'நாவலர் இராமலிங்க வள்ளலாருக்கு விரோதி யல்ல. நாவலர் சைவத்தில் கொண்ட அளவற்ற ஈடு பாடே ராமலிங்கத்தாருடன் முரண்படவைத்தது வள்ள லாரும்சைவத்திற்குவிரோத மானவரல்ல. இலங்கையில் பிறசமயத்தவருக்கு எதிராக ஒரு போராட்டத்தை நடத் திய காலச் சூழ்நிலையில் வள் ளலார்சமரசம்பேசியதுதான் நாவலர்வள்ளலாரச் சந்தே கிக்க வைத்தது' என்று வள் ளலார் காட்டிய வழி என் னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றுகையில் சிலம்புச்செல்வர் ம. பொ. சி. குறிப்பிட்டார்.

கொழும்பு ஜயந்திநகர் சுப்பிரமணியசுவாமிகோவில் மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு சிலம்புச் செல்வர் வருகைதந்த போது கோவில் அதிகாரிக ளினுல் மேளவாத்தியத்து டன் மாலைசூட்டி வரவேற் கப்பட்டார்.

சிலம்புச் செல்வர் தொட ர்ந்து பேசுகையில், குறிப் பிட்டதாவது:- வள்ளலார் தமது சமரசப் பாடலை தமி ழிலே பாடாது ஹிந்தியில் அல்லது குஜராத்தியில் பாடி யிருந்தால் டெல்லியிலே அவர்க்கு சிலை எழுப்பியிப் பார்கள்

சாதிசமய வேறுபாடுகளு க்கு எதிராகப் போராடிய வர் வள்ளலார். அவரை அன்று புறக்கணித்தோம் அவரைப்பின்பற்றி அப்பொ ழுதேதமிழன் ஒற்றுமையாக இனத்தால் ஒன்றுபட்டிருந் தானுனல் இன்றையஅடிமை வாழ்வையும் இன்னலையும் சிந்தித்து மிருக்கமாட்டான்.

சென்னையை நான் தமிழர்க்கு மீட்டு விட்டே னென்கிருர்கள். ஆனுல் அங்கு இருபதுலட்சம் குடும் பங்கள் பிளாட்பாரத்தில் வாழ்கிருர்கள். அவர்கட்கு மனைகளும், உணவும், உடை யும் கிடைத்தால்தான் உண் மையில் மீட்கப்பட்ட தாகும். ஆனுல் அவர்களின் புனர் வாழ்விற்குரிய இடம் மீட்கப்பட்டதேயொழிய புனர்வாழ்வு ஏற்படவில்லை.

விஞ்ஞானிகள் சமீபகாலத் திலேயே கண்ட உண்மை களை மெஞ்ஞானிகள் எப் பொழுதோ கூறிவிட்டார் கள் என்பதற்கு எடுத்துக் காட்டு திருவாசகத்தின் திருவண்டப்பகுதி.

இதனடிப்படையிலேயே பொருளாதார சமத்துவ தத்துவங்களையும் வள்ள லார் எப்பொழுதோ கூறி விட்டார். இதைநாம் அறிய வில்லை. ஆனுல் இன்னும் மேற்குநாட்டு விஞ்ஞானி களையே போற்றுகிறோம்.

நமது சுயமொழியாகிய தமிழிலேயே அவற்றைக் கற்பித்தால்தான் நாமே அதை அறியமுடியும். நான் ஆங்கிலத்தின் விரோதி அல்ல ஆனுல் தமிழின் மொழிவளத்தையும், அதில் உள்ள கருத்துக்களையும் நாமும் அறியாது அதை உலகத்திற்கும் பிறமொழி யாகிய ஆங்கிலத்தில் எடுத் துக்கூறுத நிலையில் பிற மொழியைப் போற்றிப் பேசுகின்றோமே என்றுதான் கவலைப்படுகின்றேன்.

## வடபகுதிக்கு வித்தியாதிபதி விஜயம்

குரும்பசிட்டி, திங் ஊர்காவற்றுறை எம். பி திரு. வி. நவரத்தினத்தின் அழைப்பின் பேரில் கல்வி வித்தியாதிபதி திரு. டி எம். ஹெட்டியாராச்சி இம்மாதம் 14-ம் திகதி தீவுப்பகுதிக்கு உத்தியோக ரீதியில் விஜயம் செய்ய விருக்கிருர். வித்தியாதிபதி வேலணை, புங்குடுதீவு, நயி னுதீவு போன்ற இடங்களில் உள்ள மகாவித்தியாலயங்க ளுக்கு சென்று பாடசாலைக ளின் குறைபாடுகளை நேரில் அறிந்து கொள்வதுடன் கல்வி அபிவிருத்தி சம்பந் தமாக ஆலோசனைகள் நடா த்துவார் எனத் தெரிகிறது.

அன்றைய தினம் மாலை யில் மட்டுவில் மத்திய மகா வித்தியாலய பரிசளி ப்பு விழாவில் பிரதம விருந் தினராக திரு. ஹெட்டியா ராச்சி கலந்து கொள்வார். சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் தலைமையில் மக்கள் முன் னேற்றச் சங்க ...

கள் வித்தியாதிபதியை பேட்டி கண்டு பேச்சுக்கல் நடாத்துவார் எனத் தெரி கிறது.

### தொழிலாளர் முகத்தின புதிய செயலாளர்

டிக்கோயா, செவ்வாய் தமிழரசுக் கட்சியின் தலை மையின்கீழ் இயங்கிவரும் இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் பொதுச்செயலா ளராக இருந்துவந்த திரு. க. சிவானந்தசுந்தரம்இப்பதவி யில்இருந்துவிலகிக்கொண்ட படியால் அண்மையில் நடை பெற்ற கழகத்தின் செயற் குழுக்கூட்டத்தில் திரு செ கலியப்பெருமாள்இப்பதவிக் குத் தெரிவு செய்யப்பட்டி ருக்கிருர்.

ஏற்கனவே ஒருமுறை இந்த ஸ்தாபனத்தின் பொதுச்செயலாளராகக் கடமையாற்றிய திரு செ கலியப்பெருமாள் சமசமா ஜக்கட்சியின் லங்கா தோட் டத்தொழிலாளர் யூனிய னில் இவர் துணைச்செயலா ளராகக் கடமையாற்றி யவர்.

திரு கல்வலை சேயோன் கழகத்தின் துணைச்செயலாள ராகத் தெரிவு செய்யப்பட் டிருக்கின்றுர்.

### நெடுந்தீவு படகுசேவை

நெடுந்தீவு மக்களின் நீண்ட காலப்போக்கு வர த்து கஷ்டம், குறிகாட்டு வான் பாலம் திறந்ததின் மூலம் ஓரளவு குறைந்துள் ளது கடந்தகாலங்களில், நெடுந்தீவுக்கும் ஊர்காவற் றுறைக்கும் ஒருநாள் ஒரு சேவைசெய்வதுகூட பெரிய திண்டாட்டமாக இருந்து வந்தது, சமூகமுன்னேற்றச் சங்கம் இடைவிடாமல் இத ற்காக போராடி வந்தது குறிப்பிடத்தக்கது.

(5-ம்கலத் தொடர்ச்சி)

கள் ரயில் பிரயாணத்தால் சற்று களைத்திருந்தவர் போல்காணப்பட்ட பிரத மரை உற்சாகப்படுத்தி யிருக்கவேண்டும். அவர் தமிழ் மக்களின் நல்லெண் ணத்தை நன்கு உணர்ந்து மிகஉற்சாகத்துடன் காணப் பட்டார்.

### கதிர்காம . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யர் பத்துப் பேரின் சடலங் களும் பெட்டிகளில் அடக் கம் செய்யப்பட்டு இங்கு சங்கக் கட்டடத்துக்குக் கொண்டு வந்து சேர்க்கப் பட்டன. அப்பொழுது இற ந்தவர்களின் மனைவிமாரும் மற்றும் உறவினர்களடங் கிய பல பெண்களும், ஆண் களும், குழந்தைகளும் கதறி அழுதனர். குழுமியிருந்த கூட்டந்தினரைக் கட்டுப் படுத்தப் பொலிஸார் வர வழைக்கப் பட்டனர்.

சடலங்கள் கொண்டுவர பட்ட போது, கூட்டுறவு அபிவிருத்தி உதவிக் கமிஷ னர் திரு. ஏ. ஈ. பெரேரா வும் மற்றும் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர் சிலரும் அவற்றைப் பொறுப்பேற் றுக் கொண்டனர். பின் னர் சொந்தக் காரர்கள் சவ அடக்கத்துக்காக சட லங்களைத் தத்தமது இல்லங் களுக்குக் கொண்டு சென்ற னர்.

விபத்தில் காயமுற்ற மற் றும் 17 பேர் திஸ்ஸமகரம, அம்பாந்தோட்டை, காலி ஆஸ்பத்திரிகளில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். விபத்தில் சம்பந்தப்பட்ட லொறியின் சாரதி, திஸ்ஸமகரம பொ லிசாரால் விசாரணைக்காக கொண்டு செல்லப் பட்டுள் ளார்.

புதிய மனேஜர் ஒருவரை நியமிக்கும் வரை, கூட்டு றவுச் சங்கத்தின் பேக்கரி செயற்படாது. அத்துடன் 85.000 பேருக்கான வாரக் கூப்பன் ஆரிசி விநியோகமும் பத்து ஊழியர்களின் மரண த்தால் நிறுத்தப்பட்டுள் ளது.

# பிரதமரின் ஊர்வலம்

கணேஷ்

யாழ்ப்பாணத்துக்குநேற்று பகல் 11 மணியளவில் விசேஷ ரயில் மூலம் வந்த பிரதமர் திரு. டட்லிசேன நாயக்காவை வரவேற்க யாழ்ப்பாண மக்கள் அதி காலையிலிருந்தே தத்தமது இல்லங்களுக்குமுன் அலங்க ரிப்பதிலும் அவர் எங்கெங்கு வருகின்றுர் என்று கேட்டுக் கேட்டு அங்கங்கெல்லாம் ஓடிச்சென்று நிற்பதிலும் ஆர்வம் காட்டினர்.

யாழ். புதிய பஸ் நிலையம் தேசியக் கொடிகளால் அல கரிக்கப்பட்டு மேலும் சோபை பெற்றிருந்தது. அதிகமான பஸ்களில் பச் சைக்கொடிகள் பறந்து கொண்டிருந்தன. இதே போன்று பல தனியார் ஸ்தாபனங்களிலும் பொது ஸ்தாபனங்களிலும் வர்ணக் கொடிகள் பறந்துகொண்டி ருந்தன. பலவகைச்சிகரங் களும் பளிங்கு மணவறை களும் வீதி வழியெல்லாம் வைக்கப்பட்டு பிரதமர் வரு கையை எதிர்பார்த்துநின் றன

யாழ்ப்பாணத்தின் பெருமைமிக்க கற்பகவிருட் சத்தின் நுங்கும் இலங்கை யின் பலபகுதிகளிலிருக்கும் இனிமைதரும் இளநீர்க்குலை களும் ஆங்காங்கு கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன. வழிநெடுகிலும் மங்களகர மான நாள் என்பதை நினை வூட்டும் மாவிலையும் தோர ணமும், வாழைமரங்களும் சேர்ந்து நின்று செம்மை பெற்றிருந்த காட்சி ஐக்கி யத்தின் அழகை எடுத்துக் கூறிக்கொண்டிருந்தன. வர் ணக்கொடிகள் பிரதமருக்கு அசைந்துஅசைந்து வரவேற் புக் கூறிக்கொண்டிருந்தன.

பிரதமர் வந்துவிட்டார் என்ற செய்தியைக்கேட்ட தும் திக்குத்திக்காக நின்று கொண்டிருந்தவர்கள் திரண்டுகொண்டனர். நகர பாதுகாவலர்களின் கட்டுப் பாடுகளை அவர்களது அலை கடந்தஆவல் கேட்க சற்றுத் தயங்கியது. இதை அறிந்த காவலர்கள் மிக்க கண்ணி யத்துடன் நடந்துகொண் டார்கள் என்பது குறிப் பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திலிருந்து பிரதம ரும் யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பல மும் அலங்கரிக்கப்பட்ட மோட்டாரில் பவனி வந்து கொண்டிருந்தபோது மலை மலையாக மாலைகள் வந்து பிரதமரின் மலர்முகத்தை சற்று மறைக்கத்தான் செய் தன. கம்பீரமாக உடை உடுத்து தலையில் தொப்பி அணிந்திருந்த பிரதமர் தமது தொப்பியை சிறிது நேரத்தில் எடுத்து கீழே வைத்துவிட்டார். மக்க ளுக்கு தமது மரியாதை செலுத்தும் நோக்கமாக இருந்திருக்கலாமோ? வழி யெல்லாம் பிரதமர் வாழ்க இன ஐக்கியம் வாழ்க என்ற நல்லுறவுக் கோஷமி

(3-கலம் பார்க்க)


ஒரு பிரபலமான டுப்பிளிகேட்டறின் பிரபலமான மொடல் சகாயமானவிலைக்கு உண்டு

REX-ROTARY

M 2



எம்2 — விசேஷ அம்சங்கள்

காகிதங்கள் வைக்கும் பெட்டியில் 250 காகிதங்கள் வைக்கலாம். தபால் அட்டையிலிருந்து முழு அளவுக் காகிதம் வரையான எந்த அளவுள்ள காகிதத்திலும் பிரதிகள் எடுக்கலாம்.

உயரம், ஓரம் ஆகிய நிர்ணயங்களை இலகுவில் செய்யலாம். விரும்பிய விதத்தில் ஒழுங்கு செய்யக்கூடியது. ஸ்டென்சில் வெட்டுகளை செய்யக் கூடிய வகையில் சரி செய்யலாம்.

கௌண்டரில் நான்கு இலக்கங்கள் உண்டு. விரும்பினுல், ஒற்றைக் கணக்கை மாற்றி சைபர் ஆக்கக்கூடிய வசதியும் செய்யப்பட்டுள்ளது. இது எடுக்கும் பிரதிகளின் எண்ணிக்கையைச் சரியாககணக்கிடுகிறது. இயந்திரம் இயங்காதிருக்கும்போது கிராங்கின் சுழற்சிமுறை மாற்றும் பொறி சுழற்சி எண்ணிக்கைகளை இது கணக்கிடுவதில்லை.

இத்தனை சிறப்பு வாய்ந்த அம்சங்களுடன் கூடிய எம்—2 இன் விலை குறைவானதே. பாவிக்கும்போதும் அதிக செலவு ஏற்படுவதில்லை. இத ஞல்தான் எம்—2 இன் விலைக்கு அது விரைவில் நல்ல சேவைபுகிகிறது.

எம்—2 மாற்றிய இன்னும் அதிகம் கூறலாம் உங்களுக்குக் கஷ்டமின்றி எவ்வளவுதூரம் அது சேவை செய்யும் என்பதை நீங்கள் அறிய வேண்டும். தொலைபேசி மூலம் அல்லது கடிதம் மூலம் எம்முடன் தொடர்புகொண்டால், எம்—2 வேலை செய்யும் விதத்தை உங்களுக்கு உங்கள் காரியாலயத்திலேயே காண்பிப்பதில் மகிழ்ச்சியடைவோம்.

விரைவில் இறக்குமதி செய்யப்படவிருக்கிறது

ஆபீஸ் இக்கியுப்மெண்ட் லிமிட்டெட்

(OFFICE EQUIPMENT LTD.)

ஜல்லண்ட் கட்டிடம், கொழும்பு—3.

தொலைபேசி 6168

தந்தி: ஆபீஸ் எவிட்ஸ்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இந்து பல்கலைக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டிக்கவிபட்டு பிள்ளைகளை படிப்பிக்கின்றனர்கள். பேராதனையில் இடமில்லாததால் தமிழ்ப்பிள்ளைகளை குதிரைவாயத்தில் படிக்க அனுப்ப வேண்டாம் எனக்கேட்டுக் கொள்கிறேன். 10,000 மாணவர்களில், 1600 பேர் தான் பேராதனையில் படிக்கிறார்கள், 1100பேர், வித்தியோதய வித்தியலங்கார பல்கலைக் கழகங்களில், சிங்களத்தில் படிக்கிறார்கள் தமிழ் மாணவர்களின் கதி என்ன? உடனே காலதாமதமாகாமல் யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் நிறுவ வேண்டும்.

பிரதமரும் நானும், இரண்டு சமயங்களைக் கைக்கொண்டிருக்கிறோம். இரு சமயங்களும் தனி ஒரு ஊற்றில் வளர்ந்தவை. சென்ற காலத்தில் மாத்திரமல்ல, இப்பொழுதும், பௌத்தர்களும், இந்துக்களும், ஒரே கோவிலில் பயபக்தியாக வணங்குகிறார்கள். தெற்கில் கதிர்காமத்திலும், மத்திய மாகாணத்தில் முனீஸ்வரத்திலும், வடக்கில் நாகவிகாரையிலும் இதைக்காணலாம் இதனை அடிப்படையாகவைத்து சிங்கள தமிழ் ஒற்றுமைக்காக தொடர்ந்து தாங்கள் பணியாற்றவேண்டும்.

மகாவலி கங்கை வடமாகாணத்திற்கு திருப்பப்பட்டால்தான் தமிழனுக்குமீட்சி அதற்கான நடவடிக்கையை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

### வாலிபர் குறைநீக்க

பஸ் கண்டக்டர்களுக்கு தெரிவுசெய்யப்படும் வாலிபர்கள் எம். பி.க்களின் சிபார்சில் தெரிவுசெய்யப்படுவது நியாயமாகாது. குறைவான வாக்குகளால் வெற்றிபெற்ற சில எம். பி.க்கள் அரைகுறைப் படிப்புள்ள தங்கள் ஆதரவாளர்களை சிபார்சுசெய்வதால், உண்மையில் திறமையுள்ளவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இதைப்பற்றி நான் பிரதமருடனும் விரைவில் பேசி வாலிபர்களின் இன்னலை போக்கவிருக்கிறேன். இங்குவந்துள்ள போக்குவரத்துமந்திரி இதைப்பற்றி கவனித்து, நீதியான முறையில், பஸ்கண்டக்டர் தெரிவு நடைபெற வழிசெய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

### ஓற்றையாட்சி

நான் அரசியல் வாழ்வில் ஆரம்பகாலத்திலிருந்து இன்றுவரை ஒன்றைக் கைவிடவில்லை பருத்தித்துறை முதல் தெய்வேந்திர முனை கொழும்பு முதல் மட்டக்களப்புவரை சிறுபான்மையினர், தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்பது தான் அது, எனது கொள்கைஇன்று வெற்றியடைந்துவிட்டதற்கு தேசிய அரசாங்கம் ஒரு எடுத்துக்காட்டு.

### சிவசிதம்பரம் பேச்சு

திரு. சி. செல்லத்துரை வாழ்த்துப்பா பாடினார்.

வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் வரவேற்புரைநிகழ்த்துகையில் கூறியதாவது:

"கடந்த 10 ஆண்டு காலமாக இந்த நாட்டில் சிறுபான்மை இனமான நாம் சுதந்திரமற்ற அப்பாவிகளாகச் சர்வாதிகார ஆட்சியில் உழன்றுகொண்டிருந்தோம். ஆனால் தேசிய அரசாங்கம் வந்தபின்னர் தமிழர் வாழ்வில் ஓரளவு ஒளி பிறந்திருக்கிறதென்பதை யாராலும் மறுக்கமுடியாது இப்போது வட இலங்கை தென்னிலங்கை என்ற பேதமின்றி ஒன்றாக இணைந்துவிட்டோம்.

## 'எமது 'நோக்கம்'

— பிலிப்

கைத்தொழில், கடற்றொழில் மந்திரி திரு. பிலிப் குணவர்த்தன பேசுகையில் கூறியதாவது:

"இந்த நாடு பத்து ஆண்டுகளுக்கு மேலாக இருளால் சூழப்பட்டு மிகவும் கேவலமான பாதையில் சென்றுகொண்டிருந்தது இதனை மனதில்வைத்தே இந்நாடு வளம் பெறவேண்டுமென்பதை எண்ணித் தேசிய அரசாங்கத்தில் சேர்ந்து கொண்டோம். பிரதமர் திரு. டட்லி தலைமையின் கீழ் செயலாற்றத் தொடங்கினோம். கடந்த பதினெட்டு மாதங்களாக இந்நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக உழைத்துவருகிறோம். இந்நாட்டில் வாழும் தமிழர்களாக இருந்தாலென்ன சிங்களவர்களாக இருந்தாலென்ன எல்லோரும் சுபிட்சமாக வாழவேண்டும் என்பதே எம் கொள்கை

### தொண்டமான் பேச்சு

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான் பேசுகையில் கூறியதாவது:

தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகளுக்கிடையே பிளவு இருக்கிறதென்றால் அது மிகவும் மனவேதனையாகும். பழைய குரோதங்களை மனதில் வைத்துக்கொள்ளாமல் தமிழினத்தின் முன்னேற்றத்துக்காக ஒற்றுமையை வளர்ப்பதுதான் நாம் நம் தமிழ்த்தாய்க்குச் செய்யும் பெரிய கடமையாகும்.

மலைநாட்டுத் தமிழ்மக்கள் பிரச்சினையைப் பொறுத்த மட்டில் அது உள்ளூர்ப் பிரச்னை. அந்தப்பிரச்னையில் வேறெந்த இடத்திலுள்ள தலைவர்கள், கட்சிகள் குறுக்கிட்டால் என்ன பாடம் கிடைக்குமென்பதை அவர்களே உணர்வார்கள். எங்கள் பிரச்னைகளை நாமே தீர்த்துக்கொள்வோம்.

மலைநாட்டு மக்கள் சுபிட்சமாக வாழ்வதற்கு அந்தமானென்ன எந்தமானாக இருந்தாலும் அங்கு சிறப்புறவாழ நாம் போராடுவோம்.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் மலைநாட்டு மக்களைப் பொறுத்தவரையில் ஒரு பெரும் நன்மை செய்திருக்கிறது. அதாவது இலங்கைப் பிரஜாவுரிமை பெற்றவர்களானாலும், பிரஜாவுரிமை இல்லாதவர்களானாலும் தோட்டத்திலிருந்து வேலையைவிட்டு நீக்கிவிடமுடியாது என்பதுதான் என்று திரு. தொண்டமான் கூறினார்.

### மகாவலி கங்கை

காணி நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி. சில்வா பேசுகையில் கூறியதாவது:

1956லிருந்து 1965ம் ஆண்டுவரை பல அரசாங்கங்களில், காணி மந்திரியாகக் கடமையாற்றியிருக்கின்றேன். ஆனால் அப்படியிருந்தும் யாழ்ப்பாணத்துக்கு ஒருமுறையாவது வரமுடியாமல்போய்விட்டது. ஏன் அப்போது பிரதமர்களாக இருந்த எவருமே வரமுடியாமல் போய்விட்டதென்றால் நான் எம்மாத்திரம்?

தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்துவிட்டதனால் இந்த நாட்டின் பிரச்னையைத் தேசியரீதியில் தீர்க்க முன்வந்ததால் நாமும் பிரதமரும் யாழ்ப்பாணத்துக்கு வரமுடிந்தது.

மகாவலி கங்கைத் திட்டம் சாதாரண ஒரு கனவு அல்ல. ஐ நா. நிபுணர்கள் இங்கு இதுபற்றி ஆராய்ந்து

## மகாவலிக்கங்கை..,

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தது மகாவலிகங்கை நீர் மற்ற இடங்களுக்கு திருப்புவதற்கு போதுமானதா என்பது என் சந்தேகம் அதில் அவர் வெற்றிபெற்றார் இதைப்பற்றி ஆராய்ச்சி நடத்திய குழு கங்கையைத திருப்பலாம் என அறிக்கையில் கூறியுள்ளனர் உடனடியாக வேலைகள் ஆரம்பிக்க வேண்டுமெனவும் கூறியுள்ளனர் இதற்கான பொருள் வசதி பற்றி உலக வங்கியுடன் பேசியுள்ளேன் இதன் முதற்படியாக விரைவில் பெரிய குளம் கட்டப்படும் இந்தக் குளம் மந்திரி சில்வாவின் ஞாபகசின்னமாக வளங்கும்

### 'எமது நாடு'

இந்நாட்டில் வாழும் ஒவ்வொருவரும், இந்நாடு, தன் நாடு என்று எப்பொழுது கூறும் நிலை ஏற்படுகிறதோ அப்பொழுது தான் எனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் என் மனநிலையும் சாந்தி பெறும் அதற்காக உங்கள் ஒத்துழைப்பை தாருங்கள்

### பொன்னம்பலத்துக்கு பாராட்டு

உங்கள் தலைவர் பொன்னம்பலத்தை எனக்கு 30 வருடகாலமாக நன்கு தெரியும், 1936-ம் ஆண்டு முதல் சட்டசபையில் ஒன்றாகஇருந்தோம். பின்னர் பாராளுமன்றத்தில் ஒன்றாக இருந்தோம். அதன்பின்னர் தகப்பனாரின் மந்திரிசபையில் ஒன்றாக பணியாற்றினோம். பின்னர் எனது மந்திரிசபையில் கடமையாற்றினார், அவர் எனது நண்பராகஇருந்தாலும் அவர் மீது அளவுகடந்த மதிப்பும் மரியாதையும் எனக்கு உண்டு. கீழ்த்தரமான செய்கையை செய்வதென்பது அவரால் முடியாது. நீதி, நேர்மை விசுவாசத்துடன் பாடுபடக்கூடியவர். திரு. பொன்னம்பலத்தைப்போல இன்னும் சிலர் இருந்தால் இந்நாடு செழிப்பாக முன்னேறும்.

### அரசியலை ரசிக்க ஆரம்பித்தேன்

நான் கடந்த 30 வருடகாலமாக அரசியலில் இருந்தாலும், உண்மையாக அரசியலில் ஈடுபட்டது சென்ற தேர்தலின் பின்புதான். அரசியலை வெகுவாக ரசிக்க ஆரம்பித்ததும் கடந்ததேர்தலின்தான். பொதுமக்களுக்கு நன்மைசெய்யவேண்டுமென்பதே இதற்குக் காரணமாகும்.

இந்நாட்டில் வேகமான முறையில் ஜனத்தொகை


அறிக்கையும் சமர்ப்பித்து விட்டனர். இன்னும் இரண்டு மூன்று வருடங்களில் இத்திட்டம் செயற்பட்டு விடும். மகாவலி கங்கையும் தொண்டமானாறும் இணையப்போகிறது. இந்த இணை இணைப்பு சிங்கள-தமிழ்மக்களிடையே நீங்காத தொடர்பை உருவாக்கிவிடுமென்பது உறுதி. மகாவலிகங்கை வவனியா ஊடாகக் கனகராயன் குளத்தின்மூலம் இரணைமடுக் குளத்துடன் சேர்ந்து யாழ்ப்பாணம் வந்து தொண்டமானாறு நந்நீர்த்திட்டதுடன் கலந்துவிடும்.

### தேசீய ஒற்றுமை

உதவி உள்ளூராட்சி மந்திரி திரு. ஆர். பிரேமதாசா பேசுகையில் தேசிய இனத்தின் சுபிட்ச வாழ்வுக்காக உழைக்கும் தேசிய அரசாங்கத்தை இடதுசாரிக் கட்சியினர் வகுப்புவாதக் கூச்சலின் மூலம் முறியடிக்க முயன்றனர். ஆனால் கடைசியில் அவர்களுக்கு ஏற்பட்டது தோல்விதான்! அழியாத தேசிய ஒற்றுமை இப்பொழுது ஏற்பட்டுவிட்டதென்று கூறினார்.



ரயில் நிலையத்துக்கு வெளியே அமைக்கப்பட்டிருந்த மேடையில் நின்று தம்மை வரவேற்ற ஆயிரக்கணக்கான மக்கள் முன் பிரதமர் நன்றி தெரிவித்துப் பேசுகிறார்.



ரயில் நிலையத்தில் நீதியரசர் பி. ஸ்ரீஸ்கந்தரராசா, திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், செனட்டர் எஸ். நடராஜா, திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்

அதிகரித்துவருகிறது. ஆதலால் பொருளாதார வளர்ச்சியில் அதிகம் கவனம் செலுத்தவேண்டும். நாடு முன்னேற இயந்திரங்களை வெளிநாட்டிலிருந்து வரவழைக்கவேண்டும். கைத்தொழில் ரீதியில் முன்னேற வேண்டியது அவசியம். ஆகையால்தான் வரவு-செலவு திட்டத்தில் 20 கோடி ரூபாய் பொருளாதார ரீதியில் கைத்தொழிலுக்கு ஒதுக்கியுள்ளோம். உங்கள் எதிர்காலச் சந்ததியினருக்காக நீங்கள் தியாகம்செய்து உழைக்கவேண்டும்.

### கொழும்பு திரும்பினர்

பிரதமரும், மந்திரிகளும் நேற்று விமானத்தில் கொழும்பு திரும்பினர்

---

## கேள்விப்பத்திர அறிவித்தல்

மன்னார் மாவட்டம் இலுப்பைக் கடவை கிராம சபையில் தேவன்பிட்டி ரோட்டு அமைப்பதற்கான சேவைக்கு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 17-ந் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்,

கேள்விப் பத்திரங்கள் 16-ந் திகதி காலை 10 மணிக்குமுன் எமது கிராம சபையில் ரூபா 50/- கட்டுப் பணமாகவும், ரூபா 25/- விண்ணப்பபடிவப்பணமாகவும் செலுத்தி பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். ரூபா 25 எக்காரணம் பற்றியும் திருப்பிக் கொடுபடமாட்டாது. வேண்டிய விபரங்களை எமது கிராமசபை அலுவலகத்தில் அல்லது வவனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்களின் அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

ஒப்பம்:
வே. கைலாயபிள்ளை,
இ. ச. தலைவர்
கிராமசபை அலுவலகம்,
இலுப்பைக்கடவை.
7-8-66 915

## நல்லூர்..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனந்த ஆரவாரஞ் செய்து தங்கள் மகிழ்ச்சியையும்அன்பையும் தெரிவித்துக்கொண்டனர்.

தமிழரசுக்கட்சிக் கொடிகள் பறக்கவிடப்பட்ட இடத்தில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ அமிர்தலிங்கம், கோப்பாய்த் தொகுதி எம். பி. திரு. எஸ் கதிரவேற்பிள்ளை, தீவுப் பகுதி எம். பி. திரு. வி. நவரத்தினம், செனட்டர் எஸ். நடராசா மற்றும் முன்னை நாள் யாழ். மாநகரசபை அங்கத்தவர்கள் ஆகியோர் பிரதமரை வரவேற்றனர்.

---

## விசேஷ பூசை

யாழ்ப்பாணம், செல்வ கைலாய பிள்ளையார் கோவிலடி சந்தியிலிருந்து நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு அழைத்துச்செல்லப்பட்ட பிரதமரின் நல்வாழ்வுக்காக கோவிலில் விசேஷ பூசை நடத்தப்பட்டது. பின்னர் அவருக்கு காளாஞ்சி வழங்கப்பட்டது.

## மரண அறிவித்தல்

### இ. திருஞானம்

தவமணியின் அருமைக் கணவரும் செல்வரத்தினம் (சர்வகலாசாலை மாணவன் கொழும்பு) இரத்தினேஸ்வரி (யாழ்ப்பாணக்கல்லூரி வட்டுக்கோட்டை) ஆகியோரின் அருமைந் தந்தையுமாகிய இராமசாமி திருஞானம் அவர்கள் காலமாகிவிட்டார். இவர் இன்சூரன்ஸ் கூட்டுஸ்தாபன ஏஜெண்டு மாவார். அன்னாரது பூதவுடல் சமக்கிரிகைகளுக்காக புதன்கிழமை(10-8-66) காலை 2 மணியளவில் வட்டு மேற்கு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உறவினர்களும், அன்பர்களும் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

---

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெலிங்டன் மேலை வீதி. 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம்10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org